...நூலகம் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 20 வெள்ளிக்கிழமை (04.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 219

# யுத்த வெற்றியைச் சிதறடிக்கவே வேலை நிறுத்தப் போராட்டச் சதி!

## முறியடிக்க அரசாங்கம் திடசங்கற்பம்

கொழும்பு, ஜூலை 04

**யுத்தம் மூலம் அரசுக்குக் கிட்டி வரும் வெற்றிகளைத் தடுத்துச் சிதறடித்து, நாட்டில் ஸ்திர மற்ற நிலையை உருவாக்கும் அரசியல் பின்னணியுடனேயே இந்த வேலைநிறுத்தப் போராட்டச் சதி சில தரப்புகளினால் பின்னப்படுகின்றது என்று அரசு குற்றம் சுமத்தியிருக்கின்றது.**

அடுத்த வாரம் - ஜூலை 10ஆம் திகதி - தொழிற்சங்கங்களால்நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அரசு கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

தீய நோக்கம் கொண்ட இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் அப்பாவித் தொழிலாளர்கள் சிக்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்திருக்கும் அரசு, வேலை நிறுத்தத்தில் ஈடுபடாது அன்றைய தினம் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கத்திட்டமிட்டுள்ளது என்றும் கூறியுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற - அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் - ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே அரசின் சார்பில் மேற்படி தகவலை வெளியிட்டார். அவர் மேலும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நாளை 9 மணி நேர மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 4

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் அவசிய திருத்தவேலைகளைச் செய்து பூர்த்தி செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை குடா நாடுமுழுவதும் ஒன்பது மணி நேரம் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா மீண்டும் இலங்கைக்கு

கொழும்பு, ஜூலை 04

பிரிட்டனில் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), நேற்றுமுன்தினம் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார்.

நேற்றுமுன்தினம் லண்டனிலிருந்து விமானம் மூலம் புறப்பட்ட கருணா நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. அங்கு அவரை இலங்கை அதிகாரிகள் பொறுப்பேற்று பாதுகாப்பான ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று கூறப்பட்டது.

கருணா நாடுகடத்தப்பட்டமையை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## துணுக்காய், மல்லாவி நோக்கி கடும் ஷெல் வீச்சு! ஆயிரக்கணக்கில் மக்கள் அவசர அவசரமாக இடம் பெயர்வு!!

வவுனியா, ஜூலை 04

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் நகருக்கு அப்பால் மேற்கே துணுக்காய், மல்லாவி போன்ற இடங்களில் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் ஷெல் தாக்குதல்கள் காரணமாக அந்தப் பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

படையினரின் ஷெல் தாக்குதல்களால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்று முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான இலகுவழிப் பரீட்சை

8 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ இரசாயனவியல் பகுதி 1

## பத்திரிகையாளர்களின் உயிரைப் பாதுகாக்க ஜனாதிபதியிடம் வெளியீட்டாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 4

பத்திரிகையாளர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் சம்பவங்கள் எதிர்காலத்தில் மேலும் நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையின் பத்திரிகை வெளியீட்டாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கோரியுள்ளனர்.

ஊடகவியலாளர் நாமல்பெரேரா மற்றும் பிரிட்டிஷ் தூதரக அரசியல் அதிகாரி மகேந்திர ரட்ணவீர ஆகியோர் மீதான தாக்குதல்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் நேற்றிரவு கிளைமோர் தாக்குதல் மூன்று பொலிஸாரும் பொதுமகனும் காயம்

மட்டக்களப்பு, ஜூலை 04

ஏறாவூரில் நேற்றிரவு 8.20 மணியளவில் பொலிஸ் ஜீப் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் மூன்று பொலிஸாரும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்தனர்.

ஏறாவூர், பவுன்றி வீதியில் சென்று கொண்டிருந்த பொலிஸ் ஜீப் மீது சைக்கிளில் பொருத்தப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றே வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ரயில் சேவைக்கு பாதுகாப்பு வழங்கச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

வவுனியா, ஜூலை 04

வவுனியா, மாறம்பைக்குளத்தில் இனந்தெரியாத நபர்கள் நேற்றுப் பிற்பகல் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு மேலும் ஆயுதங்கள் கொழும்பு வந்து சேர்ந்தனவாம்!

கொழும்பு, ஜூலை 04

வடபோர் முனையில் பயன்படுத்துவதற்கான பெருந்தொகையான ஆயுத தளபாடங்கள் அடங்கிய தொகுதி ஒன்று செக் குடியரசிடமிருந்து கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்திருப்பதாக இலங்கைப் படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டது.

செக் தயாரிப்பான - 40 குழல்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்குமாகாண ஆளுநராக விக்டர் பெரேரா பதவியேற்பு

கொழும்பு, ஜூலை 04

முன்னாள் பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா நேற்றுக்காலை வடமாகாண ஆளுநராக அலரிமாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதியிலிருந்து வெளியேறிய 400 தமிழர் கிரிமினல்கள் போல தடுப்பு முகாமில் சிறைவைப்பு!

## மன்னார், கள்ளிமோட்டை நிலைமை குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகம் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜூன் 04

விடுதலைப் புலிகளின் பகுதியிலிருந்து வெளியேறிய மக்களை கள்ளிமோட்டைத் தடுப்பு முகாமில் தடுத்துவைத்துள்ள இலங்கை அரசு அவர்களை குற்றவாளிகளைப்போல நடத்துவதாகத் தகவல் வெளியிட்டிருக்கும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம், அந்த முகாமிலுள்ள 400 பேரையும் தாமதமின்றி விடுதலை செய்யுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள கண்காணிப்பகம் தனது அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது.

2008இல் விடுதலைப் புலிகளின் பகுதிகள்மீது தீவிரப்படுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளினால் [illegible] மக்கள் இடம்பெயருவது குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்துள்ளது. இவர்கள் அனைவரும் தமிழ் மக்கள் எனச் சுட்டிக் காட்டியுள்ள சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் இரண்டு தசாப்த காலத்திற்கு மேலாகத் தொடரும் மோதல்களின்போது, இலங்கைத் தமிழ் மக்களின் [illegible] குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்டத்தை - அதிகாரிகள் தொடர்ச்சியாகக் கட்டுப்படுத்தி வருகின்றனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்குவதைக் கடுமையாகக் கட்டுப்படுத்தி வருவதால்

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான் குழுவினர் மீது நீலாவணையில் வேட்டு!

அம்பாறை, ஜூலை 04

கல்முனையில் , நீலாவணை, செல்லத்துரை வீதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் - பிள்ளையான் குழுவின் - அலுவலகத்திற்கு முன்னால் நின்ற இருவர் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர்கள் படுகாயமடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் இருவரும் கட்சி அலுவலகத்தின் முன்னால் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்திக் கொண்டிருந்த சமயமே துப்பாக்கிச் சூட்டுகே இலக்காகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த நடராஜா ராஜ்மோகன் (வயது -48) மற்றும் சேனைக் குடியிருப்பைச் சேர்ந்த ஆனந்தராசா தங்கத்துரை (வயது - 21) ஆகியோரே இச் சூட்டுச் சம்பவத்தில் கால்களில் காயமடைந்த நிலையில் கல்முனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பாடசாலைகளின் உதைப்பந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 4

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்கள் நாளை சனிக்கிழமை இடம் பெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிக ளின் விவரம் வருமாறு:-

* காலை 9மணி- அரையிறுதி ஆட்டம்- சென்.ஜேம்ஸ் ம.வி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* மு.ப 10மணி- சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் தேவரையாளி இந்துக் கல்லூரரி

பி.ப 2.30 மணிக்கு 3ஆம் இடத்துக்கான ஆட்டமும் 3.30 மணிக்கு இறுதி ஆட்டமும் இடம் பெறவிருக்கின்றன. (01)


## இலங்கை மின்சார சபை - யாழ் பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் அவசிய திருத்த வேலைகளைச் செய்து முடிக்கும் பொருட்டு நாளை (05.07.2008) சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ் குடாநாடு முழுவதற்குமான மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தரு கின்றோம்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின்பொறியியலாளர்,
இலங்கை மின்சாரசபை,
யாழ்பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை''

(த/553592)



## யாழ்ப்பாணம் மாநகர சபை
## பொதுசன நூலகம்/சுப்பிரமணியம் பூங்கா
## தனியார் பாதுகாப்புச் சேவைக்கான விண்ணப்பம்

யாழ்.பொதுசன நூலகத்திற்கும், சுப்பிரமணியம் பூங்காவிற்கும் 01.09.2008 தொடக்கம் ஒரு வருட காலத்திற்கு தினமும் 24 மணி நேரம் பாதுகாப்புச் சேவை வழங்கக் கூடிய இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நூலகத்தில் பகல் 03 பேரும் இரவு 03 பேரும் பூங்காவில் பகல் 01 வரும் இரவு 02 பேரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட வேண்டும். தெரிவு செய்யப்படும் நிறுவனம் மாநகர சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதுடன் சித்தி பெறும் கேள்விக்காரர் ஒப்பந்தம் செய்யும் போது ரூபா 100,000/- பெறுமதியான பிணை முறி ஒன்று வழங்கல் வேண்டும்.

தொழில் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அடிப்படை வேதன அளவிற்குக் குறைவாக கோரப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

VAT, EPF, ETF போன்ற வரிக் கட்டணங்களை நிறுவனங்களே பொறுப்பேற்க வேண்டும் யாழ்.மாநகர சபை பொறுப்பேற்க மாட்டாது.

மாநகர சபையில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவம் ரூபா 100/- (வற்வரி நீங்கலாக)வும் மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் ரூபா 500/-ம் செலுத்தி மாநகரசபை அலுவலகத்தில் 30.07.2008 ஆம் திகதி பி.ப 2 மணிக்கு முன் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பப் படிவம் பெறப்பட்ட பின்னர் விண்ணப்பிக்காவிடின் வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் யாவும் 15.08.2008 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாநகர ஆணையாளர், மாநகர் சபை யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் அல்லது நேரடியாக் கையளிக்கப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் 21.08.2008 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு திறக்கப்படும். அப்போது விரும்பிய விண்ணப்பக்காரர் பார்வையிடலாம்.

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
02.07.2008

(சி/553593)


## ஊடகவியல் டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 04

யாழ்.பல்கலைக்கழக ஊடகவியல் டிப்ளோமா முழுநேர கற்கை மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இப்பரீட்சைக்குத் தோற்றிய 16மணவர்களில் பத்து பேர் சித்தியடைந் துள்ளனர். சித்தி பெற்றோர் விவரம் வருமாறு:

எஸ்.மேனகா, எஸ்.கவிதா, என்.நிறோஜினி, ரி.ரேவதி, என்.வதனா, ஆர்.நிர்மல், கே.தக்ஷிகா, எ.யசோதா என்.ஜமுனா, கே.ஜெயந்தா ஆகியோரே சித்திபெற்றவர்களாவர்.

இந்த வருட ஆரம்பத்தில் இடம்பெற்ற இப்பரீட்சையின் பெறுபேறுகள் ஆறு மாதங்களாகியும் வெளியிடப்படாமல் இருந்தமையை சுட்டிக்காட்டி கடந்த 24ஆம் திகதியே 'உதயனில்' செய்தி வெளியாகியிருந்தமை தெரிந்ததே. (அ-02)

## வணிகத் தேர்வு முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட வணிக முதற் தேர்வு 2006 பரீட்சைக்கான பெறுபெறுகள் நேற்று வெளியிடப் பட்டுள்ளன.

பரீட்சைப் பெறுபேற்றினை இன்று முதல் பட்டப்டிப்பபுகள் அலகில் பெற்றுக் கொள்ளலாம் என வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்துள்ளார். (1)

## கண்டெடுத்த பணம் பிரதம தபாலகதில்

கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகை பணம் யாழ். பிரதம தபாலதிபரிடம் ஒப்படைக்கப்ப்டுள்ளதாக பிரதம அஞ்சலதிபர் அறிவித்துள்ளார்.

தகுந்த ஆதாரத்தைக் காட்டி அலுவலக நேரத்தில் பணத்தைப் ெற்றுக் கொள்ளலாம். எனறு அவர் தெரிவித்தார். (1)

## பயிற்சி வகுப்புஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை. 04

பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கு நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த பயிற்சி வகுப்பு எதிர் வரும் 12ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## தீவக வலயத்தில் செயலமர்வு

வேலணை, ஜூலை 04

தீவக வலயப் பாடசாலைகளில் தகவல் தொழில் நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தகவல் தொழில் நுட்பப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

அதேவேளை-

தீவக வலய பாடசாலை அதிபர்களுக்கான ''கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை' என்னும் தலைப்பில் செயலமர்வு இன்று காலை 9.30மணி முதல் வேலணை ஆசிரியவள நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (01-267)

### திருத்தி வாசிக்கவும்

03.07.2008ஆம் திகதிய உதயன் பத்திரிகை இரண்டாம் பக்கத்தில் வெளிவந்த Dr.குந்தவி மதிவண்ணன் பற்றிய மரண அறிவித்தலில், இரண்டாம் பந்தியில் Dr. அம்பலவாணபிள்ளையின் (பருத்தித்துறை) அன்பு மனைவியும் என்று வரும் பகுதி தவறாகும். அதனை Dr. அம்பலவாணபிள்ளை மதிவண்ணனின் அன்பு மனைவியும் என்று திருத்தி வாசிக்கவும். விளம்பர முகாமையாளர்.


### விற்பனைக்கு

800cc சிவப்பு நிற KAxxxx தொடரிலக்கமுடைய மாருதிக் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் எனபனவும் விற்பனைக்குண்டு

தொடர்பு:-
838 ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம். 0772348888

### ஆள் தேவை

வர்த்தக நிறுவனம் ஒன்றில் பகுதி நேரமாகவும் முழு நேரமாகவும் வேலை செய்வதற்கு ஆள் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-S.குமணன்
9/6, மலர் மகள் றோட்,
அரியாலை.
T.P:- 779568485

### பாலன் மில்ஸ்

தேங்காய் கொப்பறா , இலுப்பைப்பருப்பு, எள் போன்றவற்றை 3கிலோவில் இருந்து 1000 கிலோ வரை உடன் எண்ணையாக ஊற்றிப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் No.1 R.S.T மார்க் தேங்காய் எண்ணெயையும் பெற்றுக் கொள்ளலாம்.

மாவடிச் சந்தி, வட்டுக் கோட்டை.


## யாழ்.பல்கலையில் இன்று விரிவுரை

யாழ்.மாவட்ட விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் 'மூட்டுக்களைத் தாக்கும் வாதரோகங்களும் அவற்றின் பராமரிப்பும் தடுப்பு முறைகளும்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் திருமதி ரி.தில்... பனின் விரிவுரை இன்று பி.ப 2.30 மணிக்கு பல்கலைக்கழக பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும். (203)


## யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி
### நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2008

காலம் :- இன்று (04.07.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணி
இடம் :- கல்லூரி வாகீசர் மண்டபம்
தலைவர் :- திரு.சி.சிவனேஸ்வரன் (அதிபர்)
நிறுவுநர் பேருரை :- திரு.சோ.பத்மநாதன் (ஓய்வு பெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
பிரதம விருந்தினர் :- திரு.ம.பிரதீபன் (திட்டப் பணிப்பாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர் :- திருமதி றெஜினா இருதயநாதன் (ஓய்வு பெற்ற வலயக்கல்விப்பணிப்பாளர்)
பரிசில் வழங்குதல் :- திருமதி ரஜனி பிரதீபன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்.

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நாளை (05.07.2008) சனிக்கிழமை எமது சங்க 'கோப் சிற்றி' திறப்பு விழாவில் மானிப்பாய் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிப் பொறுப்பாளர் திரு. வே. மகேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார் என்பதனை அறியத்தருகின்றோம்.

பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.


## மரண அறிவித்தல்



### இராசா நடராசா

கொக்குவில் நந்தாவிலை பிறப்பிடமாகவும் பழைய வீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசா நடராசா (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்கள் (01.07.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு இராசா - சின்னத்தங்கச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற அப்புத்துரை இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி அப்புத்துரையின் அன்புச் சகோதரனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சுகிர்தராஜ் (இணைப்பாளர், ஜெசாக்), துஷியந்தி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுஷாந்தி (ஆசிரியர் - யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) கிரிதரன் (அமெரிக்கா) ஆகியோரின் மாமனும் சுஹந்தா்யா (மாணவி, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), ஆத்மிஹா, நிதிலா (அமெரிக்கா), நிர்ஷாந் (அமெரிக்கா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.07.2008) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுகீர் (மகன்)
பழைய வீதி, கோப்பாய் தெற்கு. (சி/553590)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
10.08.1933

உதிர்வு
15.07.2007

### அமரர்
### சுப்பரமணியம் (இரண்டாயிரம்) இராசமணி

திதி: துதியை (04.07.2008)

பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் சிகரமாய்
பாசமுடன் இணைந்த இனிய உங்கள் முகம்
எங்கள் நெஞ்சை விட்டகலாது!

இன்று (04.07.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிராத்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தங்கராசா குடும்பம், வீரேந்திரன் குடும்பம், புவனேந்திரன் குடும்பம், இளங்கோ (கல்பனா) குடும்பம்,சுரேந்திரராஜா குடும்பம், தர்மகீர்த்தி (லதா) குடும்பம், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மாகியப்பிட்டி சந்தி,
சண்டிலிப்பாய்.
(76023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ள 12 வருடங்களின் பின் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜூலை4

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு 12 வருடங்களின் பின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.கண்டி வீதிக்கும் (ஏ-9 வீதி) பழைய புகையிரதப் பாதைக்கும் இடைப்பட்ட நெற்காணிகள் முழுவதிலும் நெற்செய்கை மேற்கொள்வதற்கு அரச அதிபர் ஊடாக படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இக்காணிகளில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்கள் மற்றும் செய்கையாளர்கள் மேற்கொள்ளவேண்டிய பதிவுகள், ஒழுங்குகள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிமை முற்பகல் 10 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நல்லூர்ப் பிரதேச செயலர், யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள உதவிகள், சலுகைகள் குறித்து விளக்கமளிக்கவுள்ளனர்.

செய்கைக்கு அனுமதிக்கப்படுகின்ற காணிச் சொந்தக்காரர்கள் அல்லது செய்கையாளர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட காணி உறுதியின் போட்டோப் பிரதியுடன் கூட்டத்திற்கு சமுகம் தருமாறு அரியாலை விவசாய சம்மேளனம் கேட்டுள்ளது.

12 வருடங்களுக்குப் பின்னர் கிடைத்துள்ள இச்சந்தர்ப்பதைத் தவறவிடாது நெற்செய்கை மேற்கொள்வதற்கு காணிச் சொந்தக்காரர்/நெற்செய்கையாளர்கள் முயற்சிக்கவேண்டும் என்றும் சம்மேளனம் கேட்டுள்ளது. (202)

## ஊர்காவற்றுறை உ.அ.அ.பிரிவில் ஆள்பதிவுத் திணைக்கள கிளையின் திறப்பு விழா

கரம்பொன்,ஜூலை4

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் ஆள்பதிவுத்திணைக்கள கிளை அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்வார். (202-325)

## திருத்தப்படும் வீதிகளில் உடனடியாகவே நீர் ஊற்றுவதால் மீண்டும் சேதமடைகின்றன

### இச்செயற்பாட்டை நிறுத்துமாறு ஆணையாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை4

மக்களின் போக்குவரத்து நன்மை கருதி அதிக பணம் செலவு செய்து வீதித் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் வீதிக்கு தார் ஊற்றிய அதே தினத்திலேயே வீதிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதால் அவை மீண்டும் சேதமடையக்கூடிய நிலை ஏற்படுகின்றது.

எனவே இச்செயற்பாட்டை தடுப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ கேட்டுள்ளார்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வீதித் திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இவ்வீதிக்குத் தார் ஊற்றிய தினத்திலேயே வீதி ஓரத்திலுள்ள வர்த்தக நிலையத்தினர் குழாய்கள் மற்றும் வாளிகள் மூலம் தண்ணீர் ஊற்றி நனைத்து விடுகின்றனர். இவற்றால் வீதியின் உள்பக்கத்திற்கு நீர் ஊடுருவிச் சென்று வீதியின் முழுக் கட்டமைப்பையும் பாதித்து வருகின்றது.

எனவே சம்பந்தப்பட்டோர் வீதியில் நீர் ஊற்றுவதை முற்றாக நிறுத்தி வீதிகளை சேதமடையாது பாதுகாப்பதற்கு ஒத்துழைப்பு தருமாறு மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (202)




## யாழ்.நகர் - மண்டைதீவு பஸ்சேவை செவ்வாய் முதல் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்.நகரிலிருந்து மண்டைதீவுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை முதலாம் திகதி தொடக்கம் - நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் - மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுக்கான பஸ் சேவை கடந்த பல வருடங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

மீண்டும் அங்குள்ள பாடசாலைகளுக்கு யாழ்ப்பாண பகுதியில் இருந்து சென்று கற்பிக்கும் ஆசிரியர்கள் மற்றும் அங்கிருந்து யாழ்.நகர பாடசாலைகளுக்கு தினமும் வந்து செல்லும் மாணவ, மாணவியரின் நலன்கருதியே இந்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாள் ஒன்றுக்கு இரண்டு தடவை நடைபெறும் இந்த சேவை பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொறுத்து விரிவுபடுத்தப்படுமெனவும் கூறப்படுகின்றது. (202-302)

## காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை4

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் ஆசிரியர்களையும் மாணவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கி, சிவகணேசன் ஸ்ரோர்ஸ் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் ஜி.சீ.ஈ சாதாரண தரம் - 2007 பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களும், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இளைப்பாறிய கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் சோ.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தம்பதியினர், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்.மேற்றக் கிளைமுகாமையாளர் வி.அருளானந்தம் தம்பதியினர் ஆகியோர் கலந்துகொள்வர். (202)



மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கென ஜி.ரி.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

கட்டடத்தை ஜி.ரி.இசற் நிறுவன முதன்மை ஆலோசகர் கலாநிதி போல் லூட்ஸ் திறந்துவைத்தார்.

நிலையத் தலைவர் சி.சிவானந்தம் தலைமையுரை நிகழ்த்துவதை முதலாவது படத்தில் காணலாம்.

கலாநிதி போல் லூட்ஸிற்கு வண.பிதா ரி.எச்.வசந்தகுமார் அடிகளார் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் -

நிலையத்தின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலரை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வெளியிட்டு வைப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: அருணன்)

## மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

யாழ்.கல்வி வலயத்தில் பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்டுள்ள மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் 20 மாணவ, மாணவியருக்கு இந்தக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

தெரிவுசெய்யப்பட்டவர்கள் தவறாது அன்றைய தினம் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (202-302)

## வலி.கிழக்கில் திருடர்கள் தொல்லை

நீர்வேலி,ஜூலை4

நீர்வேலி, கோப்பாய், அச்செழு பகுதிகளில் திருடர்களின் கைவரிசை இரவு நேரங்களில் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் கூடுதலாகத் தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டார் இயந்திரங்களே இரவு நேரங்களில் திருடர்களால் களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தோட்டக் கிணறுகளில் பொருத்தப்பட்ட மோட்டார்களே இவ்வாறு திருடப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

தோட்டங்களில் உள்ள மோட்டார்களை பாதுகாப்பு கருதி விவசாயிகள் அகற்றி வருகின்றனர். (202-224)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,ஜூலை4

தென்னிந்திய திருச்சபை யாழ்.ஆதீன சமயக் கல்விக் குழு நாளை சனிக்கிழமையும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் பி.ப. 3.30 மணிவரை வைத்தியசாலை வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் "உலகத் திருச்சபை வரலாறு", "இன்றைய உலகில் திருச்சபை", "நான்கு நற்செய்திகள்" என்னும் தலைப்புகளில் கருத்தமர்வு நடத்தவுள்ளது.

புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை திருமதி எம்.மல்லிகா, யாழ்.பல்கலைக்கழக சிற்றலாயக் குரு அருட்பணி வி.பத்மதயாளன் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (202)

## அதிகாரத்தை சேவை மனப்பான்மையுடனும் நீதியுடனும் பயன்படுத்துவது அனைவருக்கும் நன்மை பயக்கும்

### மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பி.சுவர்ணராஜ் கருத்து



மந்திகை,ஜூலை4

மனிதன் தனக்குக் கிடைக்கும் அதிகாரத்தை நல்ல முறையில் சேவை மனப்பாங்குடனும் நீதியுடனும் பயன்படுத்த வேண்டும். அதிகாரம் ஒரு மனிதனது கையில் இருக்கும்போது அவன் தவறான வழிகளில் சென்றுவிடக் கூடாது. சாதாரண நிலையில் அதிகாரம் ஒருவரது கையில் குவியும்போது அவர் கடினமாக நடந்துகொள்ளக்கூடாது. அதிகாரம் மனிதனை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்தது. இந்த மாற்றம் மனிதனுக்கு நன்மை பயப்பதாக அமையவேண்டும்.

மேல்நீதிமன்ற நீதிபதியும், சிவில் மேல்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியுமான பீ.சுவர்ணராஜ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் அவருக்கு வழங்கப்பட்ட மதியபோசன விருந்து நிகழ்விற்கு நன்றி தெரிவித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பீ.குமாரசாமி நிகழ்விற்கு தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய மேல்நீதிமன்ற நீதிபதி சுவர்ணராஜ் குறிப்பிட்டதாவது:

மனிதன் [illegible] கிடைக்கும்போது தனக்குக் கி[illegible] நல்ல வழியில் பயன்படுத்தவேண்டும் என எண்ணவேண்டும். மனிதனுக்கு அதிகாரங்கள் வரும், போகும். அதிகாரங்கள் வரும்போது சமநிலையிலிருந்து மனிதாபிமானத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்தி சிறந்த சேவைகளை மக்களுக்கு வழங்கவேண்டும். நீதிபதிகள், அரச சேவையாளர்கள் இதனை மறந்துவிடக்கூடாது.

இன்றைய நிகழ்விலே உரையாற்றிய சட்டத்தரணிகள் சிலர் ஒருவரோடு ஒருவர் நீதிமன்றில் மோதிக்கொள்வது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். இது மிகக் கவனிக்க வேண்டியது. அன்புக்குக் கண் இல்லாதது போல, வெறுப்புக்கும் கண் இல்லை. வெறுப்பு மனதில் ஏற்படும்போது செய்யப்படும் செயல்களுக்கும் சொல்லப்படும் வார்த்தைகளுக்கும் சரியான காரணங்கள் இல்லாதிருப்பதைக் காணலாம். அங்கு நீதியையும் காணமுடியாது.

வெறுப்பானது நீதி, பாரபட்சமின்மை, இரக்கம், புரிந்துணர்வு, மனிதாபிமானம் என்பவற்றை இல்லாமல் செய்கின்றது. நீதிமன்றத்திலும் சரி எந்த நிறுவனத்திலும் சரி வெறுப்பு மனிதனை ஆள் கொண்டு விடக்கூடாது. இவ்வெறுப்பு தெளிவற்ற பார்வையைத் தந்துவிடாதபடி நாம் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

தவறான, பிழையான நடத்தைகளே [illegible] திட்டங்களை, விதிகளை உருவாக்குவதற்குக் காரணமாகின்றன. தவறான, பிழையான நடத்தைகள் ஏற்படும்போது அவ்வாறான நடத்தைகளுக்குத் தண்டனை வழங்கப்படுவதோடு அவ்வாறான நடத்தைகளை எவ்வாறு தவிர்க்கலாம், எவ்வாறு எச்சரிக்கை செய்யப்படலாம் என்பன பற்றி நல்ல சட்டங்கள் போதிக்கின்றன.

மக்களைப் பாதுகாப்பதற்காகவே நாடாளுமன்றம் சட்டங்களை ஆக்குகின்றது. இச்சட்டங்கள் தேவைக்கேற்ப நாடாளுமன்றத்தால் மாற்றப்படக்கூடியது. அதிகாரிகள் தமது அலுவலகங்களை நிர்வகிப்பதற்காக சில விதிகளைக் கடைப்பிடிக்கும்படி கீழுள்ளவர்களுக்கு அறிவுறுத்தலாம். அந்த அறிவுறுத்தல்கள் தவறுகள், பிழைகள் நடக்காமல் இருப்பதற்குப் பெரிதும் உதவுவனவாக இருக்கும். அதற்கு யாவரும் ஒத்துழைப்பு வழங்கினால் நிறுவனம் ஒழுங்காகவும், நீதியாகவும், சிறப்பாகவும் இயங்கமுடியும்.

பருத்தித்துறை எனக்குப் புதிய இடமல்ல. நான் இங்கு கல்வி கற்ற கால நினைவுகள்எனது மனதை விட்டு இன்றும் நீங்கவில்லை. பருத்தித்துறை நீதிமன்றம் தனியார் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. பருத்தித்துறை நகரில் உள்ள நீதிமன்றக் கட்டடத்தைப் புனரமைத்து வசதிகளை ஏற்படுத்த என்னாலான பங்களிப்புக்களை நிச்சயம் மேற்கொள்வேன் - என்றார். (202-218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத்துறையை முன்னேற்ற முனைப்புடன் செயற்படுகின்றது மக்கள் வங்கி

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையை முன்னேற்றுவதற்கு முனைப் புடன் செயற்பட்டு வருகின்றது மக்கள் வங்கி. இதற்கென யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நிதியுதவிகளை எமது வங்கி வழங்கி வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமை யாளர் ரி.கே.ஆனந்தராஜா. மக்கள் வங்கியின் 47 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி அதன் செயற்பாடுகள் தொடர்பாக உதயனுக்கு விவரிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

## குடாநாட்டில் 3 லட்சம் வாடிக்கையாளருக்கு சிறப்பான சேவையை வங்கி வழங்குகிறது

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வடமாகாணத்தில் மக்கள் வங்கியின் முதலாவது கிளை 1962 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் அமைக் கப்பட்டது. அதன் பின்னர் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், காங்கேசன்துறைக் கிளையும் அமைக்கப்பட்டன.

1971 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிய கூட்டுறவு வங்கிகளை மக்கள் வங்கி ஒருங்கிணைத்தது. இதன் மூலம் யாழ்.மாவட்டத்தில்13 கிளைகளும் 6 சேவை நிலையங்களும் தற்போது செயற் பட்டு வருகின்றன. வடமாகாணத்தில் 20 மக்கள் வங்கிக் கிளைகள் உள்ளன.

மக்கள் வங்கிக்கு யாழ் மாவட்டத்தில் மட்டும் 3 லட்சம் வாடிக்கையாளர்கள் உள் ளனர். இவர்களில் 62 ஆயிரம் மாணவர் களும், 25 ஆயிரம் 5 வயதுக்குட்பட்ட சிறு வர்களும் அடங்குகின்றனர். யாழ்ப்பாணத் தில் மக்கள் வங்கியின் 6 சேவை நிலை யங்கள் இப்போது உள்ளன. இதனை விட இவ்வருட இறுதிக்குள் மேலும் 6 சேவை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

தற்போதுள்ள 13 கிளைகளில் காங்கேசன் துறை, ஊர்காவற்றுறை தவிர்ந்த ஏனைய 11 கிளைகளும் கணனி மயப்படுத்தப் பட்டு வலைப்பின்னலில் இணைக்கப் பட்டுள் ளன. இவற்றில் யாழ்ப்பாணம், யாழ்.பல்கலைக்கழகம், பருத்தித்துறை ஆகிய மூன்று கிளைகளில் இலத்திரனியல் அட்டை (ATM) மூலம் பணம் பெற்றுக்கொள்ளும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இன்னும் இரு மாதங் களுக்குள் சுன்னாகம், சாவகச்சேரி ஆகிய கிளைகளிலும் இந்த இயந்திரங்கள் பொருத் தப்படவுள்ளன.

பிறக்கும் குழந்தைகளுக்கு மக்கள் வங்கியே 100 ரூபாவை வைப்பிலிட்டு அவர்களது பெயரில் கணக்குகளை ஆரம் பிக்கின்றது. 'இசுறு உதான' என்ற இந்தக் கணக்கின் மூலம் பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் பயனடைகின்றார்கள். அத்துடன் மக் களிடையே சேமிப்புத் திட்டத்தை ஊக்கு விப்பதற்கு 'ஜயஸ்ரீ' பரிசுத்திட்டத்தை எமது வங்கி அமுல்படுத்தியுள்ளது. இதன் மூலம் பல பெறுமதிமிக்க பரிசில்கள் வாடிக்கை யாளருக்குக் கிடைக் கின்றன.

### பொதுச் சேவைகளுக்கு நிதி உதவிகள்

அத்துடன் பொதுச் சேவைகளுக்கும் மக்கள் வங்கி நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. குறிப்பாகக் கடந்த வருடங் களில் தெல்லிப்பழை, மந்திகை வைத்திய சாலைகளில் பல்வேறு வசதிகளை ஏற் படுத்துவதற்கான நிதியுதவியை வங்கி வழங்கியுள்ளது. பாடசாலை நிகழ்வுகளுக் கும் கல்வி, விளையாட்டுத்துறைச் செயற் பாடுகளுக்கும் நாம் உதவிகளை வழங்கி வருகின்றோம். ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி யெய்தும் மாணவர்களுக்கும், ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் சிறப் பாகச் சித்தியடையும் மாணவர்கள் இரண்டு வருட உயர்தரக் கல்வியை மேற்கொள் வதற்கும் எமது வங்கி நிதியுதவிகளை வழங்கி வருகின்றது.

### கடன்வசதிகள்

இவை தவிர,

- ✱ வியாபாரம்
- ✱ விவசாயம்
- ✱ வீடமைப்பு
- ✱ சுயதொழில் முயற்சி

ஆகியவற்றுக்கான கடன் திட்டங்களை வங்கி இப்போது யாழ்ப் பாணத்தில் செயற் படுத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர் களுக்கு 86 மில்லி யன் ரூபாவை வங்கி வீட மைப்புக் கடனாக வழங் கியுள்ளது. குறைந்த வட்டி வீதத் தில் இந்தக் கடன்கள் வழங்கப்பட் டுள்ளன.


குடாநாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளை களில் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத் துவதில் நெருக்கடிகள் இருந்தாலும் ஏனைய இடங்களில் வாடிக்கை யாளர் களுக்குக் கிடைக்கும் வசதிகள் யாழ்ப்பாணத்திலும் கிடைக்கப்பெற வேண்டும் என்பதில் எமது வங்கி அதிக கவனம் செலுத்துகின்றது.

### பாடசாலைகளில்

பிரபல பாடசாலைகளில் மக்கள் வங் கியின் அலகுகள் நிறுவப்பட்டு செயற்படுத் தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பெரும் எண்ணிக்கையான மாண வர்கள் சேமிப்பை மேற்கொண்டு வரு கின்றார்கள். இம்மாதம் மேலும் 13 பாட சாலைகளில் வங்கியின் அலகுகள் திறக்கப்படவுள்ளன.

அத்துடன் வங்கி தனது 47 ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தையொட்டி வாடிக்கையாளர்களுக்குப் பல்வேறு சலு கைகள் வழங்கி வருகின்றது குறிப்பாக ஏ-9 வீதி மூடப்பட்டமையால் எம்மிடம் கடன்களைப் பெற்ற பலர் வருமானங் களை இழந்துள்ளார்கள். இவர்கள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஆகக் கூடுதலான வட்டிச் சலுகைகளை எமது வங்கி வழங்கியுள்ளது. அத்துடன் கடன்களைத் திரும்பிச் செலுத்தும் கால எல்லையையும் நீடித்துள்ளது என்றார்.

மக்கள் வங்கியின் திறமையான சேவைக்கும் சிறப்பான செயற்பாட்டிற்கும் வங்கியின் வாடிக்கையாளர்களின் ஒத்து ழைப்பே காரணமாகும். அத்துடன் மக்கள் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமை யாளர்கள், பணியாளர்களும் மக்கள் வங்கியின் வளர்ச் சிக்கு உறுதுணையாக இருந் துள்ளார்கள் - என்றார்.



**வடவலய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராஜா உதயனுக்குச் செவ்வி**

**செவ்வி: டிலான்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# 131 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட கட்டடத்திலேயே இப்போதும் இயங்குகின்றது கோண்டாவில் கிழக்கு சி.சி.த.க.பாடசாலை

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 131 வருடங்கள் கடந்துவிட்ட போதும் ஆரம்பிக்கப்பட்ட போது இருந்தே அதே கட்டடத்தில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது கோண்டாவில் கிழக்கு சிலோன் சேச் தமிழ்க் கலவன் பாடசாலை.

கட்டடம் சிறிதென்றாலும் கல்வியில் குறிப்பிடத்தக்க பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளும் ஒரு பாடசாலையாக அது திகழ்கின்றது.

1877ஆம் ஆண்டு இலங்கை கிறிஸ்தவ சபையினால் நிர்மாணிக்கப்பட்ட இப்பாடசாலை போதியவளமின்றி காணப்படுகின்றது. சுமார் ஒன்றரைப் பரப்புக் காணியில் கட்டடத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இன்று இப்பாடசாலையில் தரம் ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன. 115 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். அதிபருடன் 5 நிரந்தர ஆசிரியர்களும், இரண்டு தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களுமாக ஏழு பேர் கடமையாற்றுகின்றார்கள்.

ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர் இல்லை. சேவை நோக்கின் அடிப்படையில் ஒருவர் தொண்டர் ஆசிரியராக ஆங்கில பாடம் கற்பிக்கின்றார்.



மைதானத்தில் மாணவர்கள்....

பாடசாலை சம்பந்தமாக அதிபர் இ.அருணாசலத்துடன் உரையாடிய போது திறந்த மனதுடனும் நிறைந்த உள்ளத்துடனும் பாடசாலை பற்றி கூறுகின்றார்.

மாணவர்கள், பெற்றோர்களின் நகரப்புற மோகம் எமது பாடசாலை சுற்றாடலிலும் காணப்படுகின்றது. எமது பாடசாலையில் கற்கும் மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

கடந்தாண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் நான்கு மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள். 22 பேர் பரீட்சைக்கு தோற்றினார்கள். இந்தாண்டும் ஆசிரியர்களினால் காலை, மாலையில் விசேட வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்தாண்டு 19 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளார்கள். இவர்களில் ஆகக்குறைந்தது 5பேர் சித்தி அடைவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.




தரம் 5இற்கான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்களை நடத்தும் ஆசிரியை திருமதி ஜே.தேவராசா மாணவர்களை தயார்ப்படுத்துவதில் அனுபவம் மிக்கவர். கடந்த ஆண்டுகளில் ஆசிரியையின் முயற்சியினால் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்துள்ளார்கள்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நல்ல முறையில் பாடசாலையினதும் மாணவர்களினதும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்கிறது. பெற்றோர்கள் வறுமைக் கோட்டிற்குட்பட்டவர்களாக இருப்பதனால் பெரியளவில் பொருளாதார உதவிகளைச் செய்யும் நிலையில் இல்லை.

தம்மால் இயன்ற பொருளாதார ரீதியிலான உதவியைச் செய்வதுடன் முழுமையாக உடல் உழைப்பையும் வழங்கி வருகின்றார்கள்.

இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் நல்ல நிலையில் இருக்கின்ற போதிலும் இப்பாடசாலையை பற்றி சிந்திக்க நினைப்பதில்லை. அனைவரும் உயர்கல்வி வாய்ப்பை வழங்கிய பாடசாலையை நேசிக்கும் அளவுக்கு ஆரம்பக் கல்வியை வழங்கிய இத்தகைய பாடசாலைகளை நினைக்கவும், உதவி செய்யவும் தவறும் செயல் வேதனையை அளிக்கின்றது.

இந்த சுற்றாடலில் வாழும் பலர் இன்று மிகவும் வசதி படைத்தவர்களாகவும் பழைய மாணவர்களாகவும் காணப்படுகின்றார்கள். பாடசாலைக்கு உதவி செய்ய வேண்டும் என்றோ பாடசாலைக்கு ஒரு பழைய மாணவர் சங்கம் அமைக்க வேண்டும் என்றோ சிந்திக்கத் தவறுகின்றார்கள்.

131 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் பழைய மாணவனும் ஊரெழு கணேசா வித்தியாலய முன்னாள் அதிபருமான இ.குலசிங்கம் தற்போது ஈடுபட்டு வருகின்றார்.

## கட்டட வசதிகள் இல்லாத போதிலும் கல்விப் பணி தடையின்றி தொடர்கிறது

மாணவர்களின் ஆற்றல்கள் வளர்க்கப்படுவதற்கு வேண்டிய இடவசதி பெரும் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. அயலில் பல வெற்றுக் காணிகள் காணப்படுகின்றன. அதனை பாடசாலைக்கு வழங்கவோ அன்றி அதனை வாங்கித் தருவதற்கோ யாரும் முன் வருவதில்லை.

வெளிநாடுகளில் பல நூற்றுக்கணக்கான அயலவர்களும் பழைய மாணவர்களும் வாழ்கின்றார்கள். அவர்கள் மனம் வைத்தால் ஏனைய பாடசாலைகளைப் போன்று இந்தப் பாடசாலையும் மிகவும் உயர்ந்த இடத்திற்கு செல்ல முடியும் எனத் தெரிவித்தார்.



பாடசாலை மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொண்டு கோட்ட மட்டத்தில் இடங்களைப் பெறுகின்றனர்.

ஆங்கிலப் போட்டியிலும் கோட்ட மட்டத்தில் கலந்து கொள்கின்றார்கள். ஆனாலும் இடங்கள் கிடைக்காமையால் வலயம் செல்லும் நிலைமை காணப்படவில்லை.

சமய அறிவுப் போட்டிகள் போன்ற ஏனைய போட்டிகளிலும் கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

பாடசாலை ஆசிரியை திருமதி ஜெ. தேவராசா ஆரம்பக் கல்விக்கான ஆக்கத் திறன் போட்டியில் கலந்து கொண்டு கற்றல், கற்பித்தல் உபகரணப் போட்டியில் பரிசில்களைப் பெற்றுள்ளார்.

ஆரம்பப் பாடசாலையாக இருக்கின்ற போதிலும் முழுமையான சிறுவர் பூங்கா, விளையாட்டு மைதானம் போன்றவற்றைக் கொண்டிருக்கவில்லை.

**புங்கவன்**

(10ஆம் பக்கம் பார்க்க)

---

# பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியர்களும் புரிந்துணர்வுடன் செயற்படும் போதே ஆளுமையுள்ள சிறுவன் உருவாகுகின்றான்

"நரகத்தைச் சொர்க்கமாகவும், சொர்க்கத்தை நரகமாகவும் மாற்றுவது மனமே" என்ற கவிஞர் மில்டனின் கூற்றுக்கிணங்க நம் செயல்கள் யாவற்றுக்கும் மூல காரணமான மனம் சலனமின்றி அமைய வேண்டும். இதற்கு முன் பள்ளிகள் முன்னோடியாக அமைய வேண்டும்.

அன்னையின் அரவணைப்பில் இருந்த பிள்ளை வீட்டுச் சூழலில் இருந்து புதிய இடத்திற்கு முதன் முதலாகக் கல்வி கற்கச் செல்கின்றான். முன்பள்ளிகள் என அழைக்கப்படும் இந்த இடம் 2 1/2 வயது தொடக்கம் 5 வயது வரையுள்ள சிறார்கள் சந்தோஷமாக ஆடிப்பாடி விளையாடி மகிழும் பூங்காவாக இருக்க வேண்டுமென குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

"சிக்மன் பிராய்ட்" குழந்தை 5 வயதை அடையும் போது நன்மையாகவோ தீமையாகவோ அதன் ஆளுமை வளர்ச்சி பெறுகிறது. 5 வயதுக்குள் இழைக்கப்படும் தீமைகள் பின் ஒரு போதும் திருத்தப்பட முடியாதன" என்கிறார். இதனைப் பெற்றோரும் ஆசிரியர்களும் நன்கு உணர வேண்டும்.

முன்பள்ளிச் சிறார்களின் செயற்பாடுகளுக்கு குடும்பமே மிக முக்கிய செல்வாக்கைச் செலுத்துகிறது. பாலர்களின் பேச்சு வார்த்தை, பழக்க வழக்கங்கள் என்பவற்றின் மூலம் குடும்பத்தினரைக் கண்டு கொள்ளலாம். "நூறு ஆசிரியரை விட ஒரு புத்திசாலித் தந்தை மேலானவர்" என்பதன் மூலம் தந்தையின் முக்கியத்துவமும், தந்தை எவ்வாறு வாழ வேண்டும் என்பதும் கல்விச் சிந்தனையாளர்களால் குறிப்பிடப்படுகின்றது. குழந்தையின் ஆரோக்கிய நிலை எனக் குறிப்பிடப்படும் உடல், உள, சமூக, ஆத்மீக நிலைகளின் உன்னத நிலையை அடைவதற்கு குடும்பம் முதற்களமாகின்றது. வீடுதான் பிள்ளையின் புனிதமான சொத்து. பெற்றோரிடையே நல்ல உறவு முறை, நற்சிந்தனை, நல்ல நடத்தை, அறவிழுமியங்கள், இறை சிந்தனை என்பன இருக்குமாயின் முன்பள்ளிகளின் பணி இலகுவாக்கப்படும். "தாயின் முகமே குழந்தையின் ஆரம்பப் பாடப்புத்தகம்" என கல்வியலாளர் குறிப் பிடுகின்றனர்.

பெற்றோருக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டும். பாலகிருஸ்ண ஜோசி என்பவர் "பிள்ளையின் முதல் ஆசானான பெற்றோருக்கும், இரண்டாம் பெற்றோரான ஆசிரியருக்கும் இடையிலுள்ள நெருங்கிய ஒத்துழைப்பே கல்வி நிலையங்களின் பகிரப்படும் பயிற்சியின் பெறுபேறு என்கிறார். B.Castle என்பவர் "பாடசாலையை விட வீடு தான் குழந்தையின் வாழ்க்கைத் தரத்தையும் போக்கையும் தீர்மானிக்கிறது. ஆசிரியரின் பணிகள் நிறைவேற்றப்படவோ நிர்மூலமாக்கப்படவோ, நன்மையாக இருப்பதற்கோ அல்லது தீமையாக அமைவதற்கோ காரணமாக அமைகின்றது" என்று குறிப்பிட்டார்.

பெற்றோரும் ஆசிரியர்களும் பாலகர்களிடம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். தண்டனைகள், வசைமொழிகள் வழக்கப்படுமாயின் அவர்களது ஆளுமை அடக்கப்பட்டு விடும். ஒதுங்கியிருக்கும் தன்மையை உருவாக்கி விடும். "முட்டாள்" என பெற்றோரும், ஆசிரியரும் கூறும் போது உண்மையில் தான் முட்டாள் என நம்பத் தொடங்குகிறது. போட்டிகளில், நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் விலகிச் செல்வதன் மூலமாக மோசமான ஏச்சிலிருந்து தப்பிவிடலாம் என எண்ணி பிழையாகச் செய்தால் தானே ஏச்சு. எனவே பேசாமல் இருப்பதே நல்லது என எண்ணுவதால் அதன் வாழ்க்கைக் கோட்பாடு "எதையாவது செய்வதற்கு முயலாவிட்டால் நான் ஒருபோதும் தோற்றுப் போய்விடமாட்டேன். என உருமாறிப் போய் விடுகிறது." என டாக்டர் ஹேய்ம் ஜி இனோட் என்ற உளவியலாளர் குறிப்பிடுகிறார்.

## குழந்தையின் வாழ்க்கைத் தரத்தையும் போக்கையும் வீட்டுச் சூழலும் பாடசாலையும் தீர்மானிக்கின்றன

முன்பள்ளிச் சிறார்களுடன் பழகும் ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும். "கத்துகின்ற ஆசிரியர் கத்துகின்ற குழந்தைகளை உருவாக்குகின்றார்" என ரூஷோ என்ற கல்விச் சிந்தனையாளர் குறிப்பிடுகின்றார். "ஓர் ஆசிரியன் என்ற வகையில் எனது அணுகுமுறைகளே வகுப்பறையை மலர்விக்கும் கவி நிலைகள். எனது மனோநிலையே அன்றைய நாளின் வானிலையாகும். எனது துலங்கலால் மாணவன் உலகம் வியக்கும் மானுடன் ஆகலாம் அல்லது எதிர் மானுடனாகலாம்" என்று கவிஞன் றொஸ் குறிப்பிடும் வரிகள் ஆசிரியர்கள் ஆரோக்கியமானவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது.

"எமது கல்வியிலே வாசிக்க, எழுத, கணக்குப்பார்க்க உச்சரிக்க எழுத்துக்கூட்ட என்பதிலே மிகுந்த கவனம் செலுத்தப்படுகின்றது. அதை மாணவர்கள் மிக நன்றாகச் செய்கிறார்கள். ஆனால் எமது கல்வி மனிதத்தை உருவாக்குவதில் மிகுந்த தோல்வி கண்டுள்ளது" என லெயோனாட் சில்பெர்மான் குறிப்பிடுகிறார்.

மனிதன் எல்லாம் புரிந்து கொண்டான். வாழும் வழி தெரிந்து கொண்டான். இருந்த போதும் மனிதனுக்கு, மனிதனாக வாழ மட்டும் புரியவில்லை. இதில் ஓர் உண்மையுள்ளது. கல்விக் கூடங்களில் அன்பு வற்றிப் போய், மனிதம் தோற்றுப் போய் மாணவர்களின் தனித்துவங்களில் அக்கறை கொள்ளாத நிலை உருவாகி வருவதை மீட்டெடுக்கும் பணி ஆசிரியர்களுடையதாகின்றது. மாணவர்களின் தனித்துவங்கள் வளர்க்கப்பட வேண்டும். எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வியானது மாணவர்களில் சிலரை விரக்தியுள்ளவராக மாற்றும். கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, கல்விக் கூடங்களை விட்டு வெளியேறும் நிலையை உருவாக்கும். எனவே சிறார்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். தனித்துவமான ஆற்றலைக் கொண்டவர் என்பதை அறிந்து ஆற்றல்களை இனங்கண்டு வளர்ப்பதே சிறந்த கல்வி வழிகாட்டலாகின்றது. கார்ல் றொஜர்ஸ் "ஒவ்வொரு மனிதனும் முழுமைபெற விரும்புகிறான்" என்றார். இந்த உலகை நாம் அழகான பூந்தோட்டமாகப் பார்க்க வேண்டும். பூந்தோட்டத்திலே ஒரே ஒரு வகைப் பூ இருந்தால் அழகாக இருக்காது. ஒவ்வொருவரும் தனித்துவமான பூ. இதை உணர்ந்து ஆசிரியர் செயற்பாடுகளை வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

பெற்றோர்கள் எத்தகைய வேலைப் பளு இருப்பினும் நேரப்பற்றாக்குறை இருப்பினும், ஆசிரியரை அடிக்கடி சந்தித்து கலந்துரையாட வேண்டும். கொப்பிகளில் எத்தனை பக்கங்கள் எழுதியிருக்கிறார்கள் என்பதனை பார்த்து விட்டு, ஒரு முன்பள்ளியை விட்டு இன்னோர் முன்பள்ளி அதாவது எழுத்து வேலைகள் அதிகமாக வழங்கும் முன்பள்ளிகளுக்கு சிறார்களை மாற்றுவதாக சில முன்பள்ளி ஆசிரியர்கள் மிக வேதனைப்படுகிறார்கள். முன்பள்ளிகளில் எழுத்து வேலைகள் மிகமிகக் குறைவு. எழுத்து வேலைகளை வழங்கக் கூடாது என்பதே உளவியலாளர்களின் கருத்தாகும். ஆடல், பாடல், விளையாட்டு, ஆக்கம், வரைதல், தசைநார்ப் பயிற்சி, ஒழுக்க விருத்தி, ஆன்மீக விருத்தி இவைகளே முக்கியமாகவுள்ளன. இதைப் பெற்றோர் உணர்ந்து வேதனத்தை எதிர்பார்க்காது அர்ப்பணிப்போடு அரவணைக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வேதனையை வழங்காது ஆதரவாக இருப்பது முன்பள்ளி ஆசிரியர்களை உற்சாகப்படுத்துவது பெற்றோரிடமுள்ள பணியாகின்றது.

பெற்றோரும் முன்பள்ளி ஆசிரியரும் கைகோர்த்து செயற்படும் போது ஆரோக்கியமான ஆளுமையுள்ள சிறார்களை சமுகத்தின் கரங்களில் ஒப்படைப்பதன் மூலம் உலகை அழகிய நந்தவனமாக்கும் முதற் பணியைச் செய்தோம் என்ற ஆத்ம திருப்தியும் ஆசிரியர்களுக்கு ஏற்படும்.

அன்பு கொண்ட, ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட மாணவர்களை உருவாக்குவது மிக உன்னதமானது என்பதை உணர்வு பூர்வமாகப் புரிந்து கொண்டு செயற்படுவது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது.

திருமதி பி.அம்பிகைபாலன்,
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்.

## வாசிப்புப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலிடம்



கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் தரம் 7 மாணவி கோபிகா விஜயரத்தினம் மாவட்டமட்ட தமிழ் மொழித் தினப் போட்டியின் பிரிவு 2 இல் வாசிப்பு போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் பருத்தித்துறைக் கோட்டம், வடமராட்சி வலயம், யாழ்ப்பாண மாவட்ட மட்டங்களில் முதலிடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் தமிழ் இரண்டையும் வளர்க்க அயராது உழைத்த பெரியவர் 'இந்து போர்ட்' இராசரத்தினம்

## ஆதரவற்ற சைவப் பிள்ளைகளும் அவர் பணியால் உயர்வு பெற்றனர்



சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்காக தன்னையே அர்ப்பணித்தவர்களுள் வடக்கில் பிரசித்தமானவர் இந்து போர்ட் சு.இராசரத்தினம் அவர்கள். மதிப்பிட முடியாத பெருமை மிக்க இவர் 1884 ஆம் ஆண்டு ஆடி மாதம் 04 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே பிறந்தார். இவர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் கல்கத்தா பல் கலைக்கழகத்தில் உயர் கல்வியையும் பயின்றார். கொழும்பு சட்டக் கல்லூரியில் பயின்று சட்டத்தரணியானார். யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதியரசராகப் பல தடவை கடமை புரிந்தார். அத்தகைய உயர்பதவிகளையெல்லாம் ஒதுக்கி எறிந்து விட்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்க, தன்னையே அர்ப் பணித்தார்.

ஐரோப்பியர் ஆட்சிக் காலமான 18 ஆம் நூற்றாண்டிலே சைவ்ம் தளர்வுற்றுக் காணப்பட்டது. இந்த நிலையில் சைவக் கல்வியையும், சைவ மக்களையும் பாதுகாக்கும் நோக்கில் சேர் பொன்.இராமநாதனும் வேறு சிலரும் சேர்ந்து 1923 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சைவவித்தியா விருத்திச் சங்கத்தை ஆரம்பித்தனர். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் சு. இராசரத்தினம் முகாமையாளராகவும், செயலாளராகவும் இருந்து அதன் இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வதில் தன்னையே அர்ப் பணித்தார். அவர் சைவத் தமிழ் பாட சாலைகளிலும் தமிழ் ஆங்கிலம் கற்கும் இரு மொழிப் பாடசாலைகளிலும் யாழ். தீவுப் பகுதி , வலிகாமம், தென்மராட்சி பகுதிகளிலும் வவுனியா, முல்லைத்தீவு, பதுளை, நாவலப்பிட்டி போன்ற இலங்கையிலுள்ள பாடசாலைகளிலும் தனது மேற்பார்வையில் சைவப் பாரம்பரியத்தை பேணி வந்தார்.

1958 ஆம் ஆண்டு அவரது மேற்பார்வையின் கீழ் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பொறுப்பில் 187 அரசாங்க நன் கொடை பெறும் பாடசாலைகள் இருந்தன. சைவ ஆசிரியர்களை உருவாக்க வேண் டிய தேவை உணர்ந்து யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சைவ ஆசிரியர் கலாசாலை ஒன்று 1928இல் உருவாக உழைத்தார். அக்கலாசாலையினூடாக சைவத் தமிழ்ப் புலமை, முயற்சி, விவேகம் உள்ள நல்லாசிரியர் பலர் உருவாக்கப்பட்டனர். 1963ஆம் ஆண்டு வரை 1500க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பயிற்சியை அளித்த இக் கலாசாலையின் பணி குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**ஆதரவற்ற சைவப்பிள்ளைகள்**

இப் பெரியார் ஆதரவற்ற பிள்ளைகளின் கல்வியிலும் போதிய கவனம் செலுத்தினார். சைவப் பிள்ளைகள் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்றாலும் அவர்கள் வீபூதி தரித்துத் தமது சைவப் பண்பாட்டிற்கு அமைவாக பாடசாலை போகலாம் என்பதை சட்ட சபையில் தமது தனியாள் தீர்மானத்தின் மூலம் நடைமுறைக்கு கொண்டு வந்தார். சைவக் கல்விப் பாரம்பரியத்தை விருத்தி செய்வதன் மூலம் சைவ சமயத்தினரின் சமுதாய வளர்ச்சிக்கு வித்திட்ட சு. இராசரத்தினம் அவர்கள் சமூகத்தில் பின் தங்கிய மக்களும் கல்வி கற்பதற்கு உரிய வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்தார். இவர் 1930இல் திருநெல்வேலியில் ஆண்களுக்கும், பெண்களுக்குமான இரு விடுதிகளையும், பாடசாலைகளையும் உருவாக்கினார். அவை இன்றும் சீரும் சிறப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்று அவ் இல்லத்திலே 200 மாணவர்கள் கல்வி கற்று கொண்டிருக்கின்றனர். பலர் க. பொ. த. உயர்தரம் கற்று திறமைச் சித்தி எய்தி பல்கலைக் கழகம், தேசிய கல்வியியற் கல்லூரிக்கும் தெரிவாகி உள்ளனர். எம் தெய்வம் வித்திட்ட இல்லத்தை பல அறிஞர்கள் கூடி நன் முறையில் வழிநடத்தி வருகின்றனர்.

சு. இராசரத்தினம் சைவ சமயத்தின் முதல் நூல்களாகத் திருமுறை பேணப்பட வேண்டும் என்பதிலும், அவற்றைப் பண்ணோடு பாட வேண்டும் என்பதிலும், அசையாத நம்பிக்கை கொண்டவர். சு. இராசரத்தினம் அவர்கள்சுமார்35ஆண்டுகளாகமேற் கொண்ட தொண்டின் பயனாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் சைவத்தமிழருக்கு அரும்பணி புரிந்தது எனலாம். அவரது பணியின் பெருமையை இந்துபோர்ட் சு. இராசரத்தினம் என்ற பெயரே உணர்த்தி நிற்கிறது. பெரும் தொண்டாற்றிய சைவப் பெருமான் 1970ஆம் ஆண்டு பங்குனி 12ஆம் திகதி சிவபதமடைந்தார் இன் றைய நன்னாளான அவரின் 124வது பிறந்த தினத் தன்று சைவச் சிறுவர் இல்ல மாணவராகிய நாம் எம் தாத்தாவின் புகழையும்எம்மை வழிநடத்தும் பெரியோரின் புகழையும் நிலை நிறுத்துவோம் என உறுதி பூணுகிறோம்.

**செ. சசிக்கா**
**சைவ வித்தியா விருத்திச் சங்க மாணவி**

## பருத்தித்துறை-சாவகச்சேரி பஸ்சேவை சீரின்மையால் பயணிகள் சிரமம்

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் ஊடாக சாவகச்சேரிக்குச் செல்லும் பேருந்து சேவை கடந்த சில தினங்களாக சீரின்மையால் தென்மராட்சி பிரதேச மாணவர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் ஆகியோர் சிரமங்களை எதிர் நோக்குகிறார்கள்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள வரணி, கொடிகாமம், மீசாலை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் அரச அலுவலர்கள் காலை 6.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பேருந்திலேயே பயணித்து வருகின்றனர்.அதற்கடுத்த பேருந்து சேவை காலை 8 மணிக்குப் புறப்படுவதால் இந்தப் பேருந்தில் பயணிக்கும் மாணவர்கள், அரசஅலுவலர்கள் உரிய நேரத்தில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தாமதமாகச் செல்வதால் மாணவர்கள் இரண்டு பாடங்கள் முடிந்த பின்னரும் அரச அலுவலர்கள் தின வரவுப் புத்தகத்தில் சிவப்பு கோடுகீறியபின்னரும்செல்லவேண்டியநிலை ஏற்படுவதாகவும்தெரிவித்தனர். (202-207)

**தென்னிந்திய திருச்சபை - யாழ்.ஆதீனம்**
**சமயக் கல்விக் குழு**
**தொடர் கருத்தமர்வு I - கிறிஸ்தவம்**

இடம்:
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு,
யாழ்ப்பாணம்.
[யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக]

காலம்:
05.07.2008 சனிக்கிழமை
06.07.2008 ஞாயிற்றுக்கிழமை

நேரம்:
காலை 8.30 மணி முதல் பி.ப 3.30 மணி வரை

விடயம்:
உலகத் திருச்சபை வரலாறு,
இன்றைய உலகில் திருச்சபை
கருத்துரை வழங்குபவர்:
திருமதி M.மல்லிகா
[ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி]

விடயம்:
நான்கு நற்செய்திகள்
கருத்துரை வழங்குபவர்:
அருட்பணி V.பத்மதயாளன்
[சிற்றாலயக்குரு, யாழ்.பல்கலைக்கழகம்]

* இவ்வாண்டு பரீட்சைக்குத் தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
* பாடக்குறிப்புக்கள் இலவசமாக வழங்கப்படும்.

ஒருங்கிணைப்பாளர்,
சமயக் கல்விக்குழு,
பரீட்சைகள் பிரிவு.

## தேங்காய்க்கு உள்ளே வைத்து வெடிமருந்து கடத்த முயற்சி!

### இறம்பைக்குளத்தில் பெண் கைது

கொழும்பு, ஜூலை 04

தேங்காயின் உட்பகுதியைச் சுரண்டி, அதற்குள் வெடிமருந்துகளை வைத்து, தேங்காயை நேர்த்தியாகப் பொருத்தி, அதை முழுத் தேங்காய் போலக் கடத்துவதற்கு எடுத்த முயற்சி வவுனியா, இறம்பைக்குளம் சோதனைச் சாவடியில் முறியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறம்பைக்குளம், அந்தோனியார் கோவிலுக்கு அருகில் உள்ள சுடலைச் சந்தி பொலிஸ் சோதனைச் சாவடி ஊடாகத் தேங்காய்க்குள் மறைத்து வைத்து ஒரு கிலோ நிறையுடைய 'சி-4 ரக' வெடிபொருட்களைக் கடத்த முயன்றனர் என்ற சந்தேகத்தின் பேரில் தேங்காய் வியாபாரியான பெண்ணும் அவர் பயணித்த பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துனரும் கடந்த செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

நான்கு தேங்காய்க்குள் இந்த வெடி பொருட்கள் கடத்தப்படுவதற்காக நாசுக்காக உட்செலுத்தப்பட்டிருந்தன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட தேங்காய் வியாபாரியான பெண் வவுனியா, சிதம்பரபுரத்தைச் சேர்ந்தவர் என்றும் -

அவர் ஓமந்தைச்சாவடி ஊடாகப் புளியங்குளம் சென்று அங்கிருந்து தேங்காய்களைப் பெற்றுவந்து வவுனியாச் சந்தையில் விற்பனை செய்துவருபவர் என்றும் - பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் பொலிஸ் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப் பட்டு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(சி)

**கண்ணீருடன்....**
**எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் கந்தையா மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் பப்பா)
திதி-பிரதமை - 04.07.2008
மலர்வு 01.06.1933
உதிர்வு 03.07.2000

இன்று போல் நினைவு எட்டு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டது
கலையாத நினைவுகள் கண்ணெதிரில் நிற்கிறது
எத்தனை காலம் ஆனாலும் என் நினைவுகள் உங்களில்தான்
நீங்கள் காட்டிய பாசத்தை நினைத்துக் கலங்குகிறேன்,
என்றும் என் நெஞ்சில் வீற்றிருக்கும் என் அன்புத் தெய்வமே
நித்தம் நித்தம் கலங்குகிறேன் என் நிலையை நினைத்து
மாண்டவர் மீண்டதில்லை என்ற உண்மை தெரிந்தும்
ஏங்கித் தவிக்கிறேன்.
இனியும் என்னைக் கலங்க விடாமல் உங்களோடு அழையுங்கள்.
என்றும் உங்கள் நினைவில் கலங்கிக் கண்ணீருடன்
நடைபிணமாக வாழ்கிறேன்.
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனை
தினம் தினம் வேண்டுகிறேன்

பழைய பாலத்தடி,
தொண்டைமானாறு .

திருமதி.ம.பரமேஸ்வரி
(மனைவி).

**மூன்றாம் ஆண்டு நினைவு தினம்**



நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தை காத்துக் கொண்டேன். (11 திமோத்தேயு 4:7)

**அமரர் J.S.கிறிஸ்ததாஸ்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஜே.பி.)
மறைந்தாலும் வாழ்பவரே

நேசராய் பண்பினாய் நேர்வழியில் நீதிமானாய்
பாசமுள்ள தந்தையாய்! பரிவிலுயர் போதகராய்!
தேசமறிந்த ஆசானாய் திகழ்ந்தவரே அப்பாவே!
மாசற்ற மனிதமே! மறைந்தாலும் வாழ்பவரே!

கி.நேசமணி (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மண்ணில்: 18.08.1933
விண்ணில்: 04.07.2005

'தங்கமால்' அல்வாய் தெற்கு,
அல்வாய்.தொ.பே: 22[illegible]

**நன்றி நவில்கின்றோம்**



வடமாகாண விசேட செயலணித்
தலைவரும் சமூக சேவைகள்
மற்றும் சமூக நலத்துறை
அமைச்சரும் ஆகிய
கௌரவ
டக்ளஸ் தேவானந்தா
அவர்கள் யாழ்ப்பாணம்
கன்னாதிட்டி காளியம்பாள்
தேவஸ்தானத்தின்
ஆதீனகர்த்தாக்களாகிய நாம் தேர்முட்டி கட்டட நிர்மாண வேலைகளுக்கு இரண்டு லட்சம் ரூபாவை நிதியாக வழங்கி ஒத்துழைப்பு நல்கியமைக்கு மிகுந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவஸ்தான
ஆதீன கர்த்தாக்கள்.

**இந்தியாவில் படியுங்கள் @ பிரிந்தாவன் கல்லூரி**
B.Sc
B.B.M
B.C.A
B.Com
பங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைப்பு பெற்றது.
இணையுங்கள் உயர்தரம் 2 பாடசித்தியுடன்
பாடநெறிகள் ஜூலையில் ஆரம்பம்
நேர்காணலுக்கான முன் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள் தொடர்புக்கு:0777-317043
Company Secretraial Service (PVT) Ltd
285C 1/1 Stanley Tillakaratne Mawatha
Abode Post, Nugegoda.

**கோழிக்குஞ்சு விநியோகம்**
BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 05.07.2008 சனிக்கிழமை விநியோகிக் கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
* ராஜீவ் -குளப்பிட்டிறோட், ஆனைக் கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* P. ரவி - சாவகச்சேரி
* திருமகள் - சிவலிங்கப்புளியடி.
* சிற்றியாம் - கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தரம் - 05 மாணவர்களுக்காக
## ஆசிரியர் பி.அம்பிகைபாகன் தொகுத்து வழங்கும்
## புலமை இலகுவழி பயிற்சிப்பரீட்சை

01. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வண்ண வண்ணப் பூக்கள் - நல்ல
மணம் நிறைந்த பூக்கள்
என்னைப் பார்த்துச் சிரிக்கும் - அவை
இனிய நல்ல பூக்கள்.

பார்க்கும் போதும் சிரிக்கும் - நான்
பறிக்கும் போதும் சிரிக்கும்
சேர்த்துக் கட்டும் போதும் -அவை
சிரித்துக்கொண்டே இருக்கும்.

ஆடி அசையும் பூக்கள் - நான்
அருகில் சென்று பறிப்பேன்
கூடை நிறைந்து போகும் - நான்
கொய்த மலர்கள் சிரிக்கும்.


1) 'பறி' என்பதன் எதிர்க்கருத்துச்சொல்லை எழுதுக.
..................................................
2) 'என்னை' என்பதன் பன்மைச்சொல்லை எழுதுக.
..................................................
3) 'இனிய நல்ல பூக்கள்' என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள பூக்கள் எவை?
..................................................
4) 'வண்ணப் பூக்கள்' என்பதில் வந்துள்ள அடைமொழியை எழுதுக.
..................................................
5) பாடலில் உள்ள படர்க்கைப் பன்மை அஃறிணைச்சொல் எது?
..................................................
6) 'பறிக்கும்' என்ற சொல்லுக்குப் பதிலாக கூறக்கூடிய சொல் ஒன்றை எழுதுக.
..................................................
7) கவிஞர் 'பார்க்கும்போது சிரிக்கும்' என எதைப்பற்றிக் கூறியுள்ளார்?
..................................................
8) 'அருகில் சென்று பறிப்பேன்' என்னும் வாக்கியத்தைப் பன்மையில் எழுதுக.
..................................................
9) பாடலில் அதிக தடவைகள் வரும் ஒரே சொல் எது?
..................................................
10) பாடலில் பெயராகவும் வினையாகவும் பயன்படுத்தக்கூடிய சொல் ஒன்று குறிப் பிடப்பட்டுள்ளது. அது எது? ..................................................

02. பின்வரும் பழமொழிகளின் கருத்துக்களை எழுதுக.
1) எய்தவன் இருக்க அம்பை நோவானேன்?
..................................................
2) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
..................................................


03. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியங்களை அமைக்குக.
1) நிலவு / பாலைப்போல / வரப் / பவனி / வானில் / போகுது.
..................................................
2) கங்குல் / மாலை / தோன்றப் / மங்கை / மலர்ந்து / வேளை / போகிறாள்.
..................................................

04. உமது சூழலில் நீர் அவதானித்தவற்றைக்கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) அறுந்த வால் மீண்டும் முளைக்கும் பிராணி எது?
..................................................
2) மரத்துக்கு மரம் தாவும்போது தனது உடலின் சமநிலையை வாலால் பேணுவது எது? ..................................................
3) மண்ணில் துளைகளை ஏற்படுத்தி, மண்ணை வளமாக்க உதவுவது எது?
..................................................
4) குயிலின் முட்டையை அடைகாத்து குஞ்சுபொரிக்க வைப்பது எது?
..................................................
5) மண்ணைத்தோண்டி மலத்தை இட்டு மூடிவிடுவது எது?
..................................................
6) மர இலை,கிளைகளுக்கிடையில் வலை அமைத்து தனது உணவிற்காகக் காத்திருப்பது எது?..................................................
7) குப்பைகூளங்களுக்கு அருகில் காணப்படும் பறக்கும் பறவையினம் ஒன்று எது?
..................................................
8) எதிரியிடம் இருந்து தப்புவதற்காகத் தான்வாழும் சூழலுக்கு ஏற்ப தனது உடல் நிறத்தை மாற்றிக்கொள்வது எது? ..................................................
9) பறக்கக்கூடிய முலையூட்டி எது? ..................................................
10) குட்டிகளை கழுத்துப்பகுதியில் வாயால் கௌவித் தூக்கிச்செல்வது எது?
..................................................


05. 'நமது நாடு இலங்கை' நமது நாட்டைப்பற்றிய அறிவைக்கொண்டு பின்வரும் வினாக் களுக்குரிய சரியான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
1) இலங்கை எத்தனை மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
..................................................
2) இலங்கையின் பெருந்தோட்டப் பயிர்கள் எவை?
..................................................
3) இலங்கையில் நெல்விளைச்சல் கூடிய பிரதேசம் எது?
..................................................
4) இலங்கையின் அரசகரும மொழிகள் எவை?
..................................................
5) இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்? ..................................................
6) இலங்கையின் A தர நெடுஞ்சாலையின் அகலம் யாது? ..................................................
7) இலங்கையைச் சூழவுள்ள சமுத்திரம் எது? ..................................................
8) இலங்கையில் அதிக மழைபெறும் பிரதேசம் எது? ..................................................
9) இலங்கையை நீண்டகாலம் ஆட்சிசெய்த அன்னியர் யார்?
..................................................
10) இலங்கையிடமிருந்து தேயிலை வாங்கும் நாடுகள் எவை?
..................................................

06.



1) இந்த உருவின்,
1. சுற்றளவு யாது? ..................................................
2. பரப்பளவு யாது? ..................................................

2)


இந்த உருவின் ஒரு முகத்திற்கு நிறந்தீட்டுவதற்கு 5 ml நிறக் கலவை தேவையெனின், இதையொத்த 5 உருக்களுக்கு நிறந்தீட்ட எவ்வளவு நிறக்கலவை தேவை? ..................................................


3)


1. இந்த அட்டைக் கீலங்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய உருவம் எது? ..................................................
2. ஆக்கப்பட்ட உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ..................................................

07. நான்கு ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து கலைநிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய மாணவர் களின் எண்ணிக்கையைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| பாடசாலைகள் | மாணவர் தொகை | |
|---|---|---|
| | பெண் | ஆண் |
| பாரதி | 70 | 50 |
| வள்ளுவர் | 65 | 49 |
| புனித மேரி | 60 | 38 |
| ஸாகிரா | 00 | 123 |

1) வள்ளுவர் வித்தியாலயத்திலிருந்து பங்குபற்றிய மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ( .................................. )
2) இக் கலைநிகழ்ச்சியில் பங்குபற்றிய ஆண்பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை யாது? ( .................................. )
3) புனித மேரி வித்தியாலயத்திலிருந்து வருகைதந்த ஆண்பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் பெண்பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள வித்தியாசம் யாது? ( .................................. )
4) அதிகளவு பிள்ளைகள் எப்பாடசாலையிலிருந்து பங்குபற்றினர்? ( .................................. )
5) கலைநிகழ்ச்சியில் பங்குபற்றிய பெண்பிள்ளைகளின் விவரங்களைக் காட்டும் வரைவை வரைக. நிரல்களை நிழற்றுக.




08. கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வைத்து வாக்கியம் ஆக்குக.
1) பஞ்சம் - ..................................................
2) கல்சியம் - ..................................................
3) வறுமை - ..................................................
4) இறக்கை - ..................................................
5) விமானம் - ..................................................
6) அருங்காட்சியகம் - ..................................................

09. சம்பவத்தின் மீதிப்பகுதியை நிறைவுசெய்வதற்குப் பொருத்தமான ஆறு வாக்கியங் களை எழுதுக.
( ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது நான்கு சொற்களாவது இடம்பெறுதல் வேண்டும். அவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைத்தொடர்பு திருத்தமான தாக இருத்தல்வேண்டும். )

வேகமாக வீசிய காற்றினால் கதவு மூடப்பட்டது. புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த நான் திகைப்படைந்தேன். புத்தகத்தை ஒரு பக்கத்தில் மூடிவைத்து விட்டு வீட்டுக்கு வெளியே வந்தேன். காற்றினால் மரங்கள் சுழன்று சுழன்று ஆடுவது என் கண்களுக்குத் தெரிந்தது. அத்துடன் அணில் ஒன்று ஓயாமல் கீச்சிடும் சத்தமும் கேட்டது. நான் அச்சத்தம் வந்த திசையை நோக்கினேன்....

1) ..................................................
2) ..................................................
3) ..................................................
4) ..................................................
5) ..................................................
6) ..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தர) மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2008 ஓகஸ்ட்
**General Certificate of Education (Adv.Level) - August 2008 Model Question paper**
(30.06.2008 ஆம் திகதி வெளியான வினாப்பத்திரத்தின் தொடர் இது)


| 02 | |
|---|---|
| T | I |

# இரசாயனவியல் பகுதி-I
2மணி / 2hours


**29.** அரோமற்றிக்கு சேர்வை R ஆனது $NaNO_2 / HCl$ உடன் $5^0C$ யில் $N_2(g)$ ஐ வெளி விட்டது.பெறப்பட்ட சேதனவிளையானது 2 - napthol உடன் NaOH முன்னிலையில் சிவப்பு சாயமொன்றைக் கொடுத்தது. ஆயின், R



**30.** பின்வரும் பொறிமுறைகள் முதல் படியை அல்லது முதல் இடைநிலை உருவாதலை குறிக்கின்றன.இதில் சிறந்த வழிமுறையன்று



**31.** இரு சம கனவளவுள்ள பாத்திரங்கள் A, B ஆகும். இவற்றில ஒன்றில் $4g\,H_2$ உம் மற்றதில் 4g He வாயுவும ஒரே வெப்பநிலையில் உண்டு. வாயுக்கள் இலட்சிய நடத்தை உடையன எனில்
1) இரு குடுவைகளும் இணைக்கமுன் ஒரே அமுக்கத்தில் உண்டு
2) இரு குடுவைகளும் சமமான மூல்களைக் கொண்டன.
3) வாயில் G திறக்கப்பட்டால் $H_2(g)$ இன் அமுக்கம் இருமடங்காகும்
4) G திறக்கப்பட்ட பின் உள்ள மொத்த அமுக்கம் ஆரம்ப மொத்த அமுக்கத்தின் அரைப்பங்காகும்.
5) இரு குடுவைகளும் இணைத்தபின் வெவ்வேறு அமுக்கத்தில் இருக்கும்




**32.** ஒரு சேதனச்சேர்வையின் சூத்திரம் $C_xH_yO_zN$ சேர்வையில் திணிவுப்படி 10.37% N உண்டு. எனின் அச்சேர்வை (C=12,N=14,H=1,O=16)
1) $C_8H_{10}NO$  2) $C_8H_9NO_2$  3) $C_7H_7NO$  4) $C_8H_9ON$  5) $C_6H_5NO_2$

**33.** NaCl(s) இன் நீரேற்றசக்தி, சாலகசக்தி என்பன முறையே -764, -769 $kJmol^{-1}$ ஆகும். இதிலிருந்து உய்த்தறியக் கூடியது.
1) 1 mol NaCl(s) இனை நீரில் கரைக்கும்போது 764kJ சக்தி வெளிப்படும்.
2) வெப்பமாக்காது NaCl(s) இனை நீரில் கரைக்க முடியாது.
3) NaCl இன் கரைசலாக்கம் அகவெப்பத்துக்குரியது.
4) NaCl இன் கரைசலாக்கத்தின்போது சாலக சக்திக்கு சமமான சக்தி வெளிப்படும். நீரேற்ற சக்தி உறிஞ்சப்படும்.
5) $Na^+(aq) + Cl^-(aq) \rightarrow NaCl(s)$ எனும் தாக்கவெப்பவுள்ளுறை $+5\ kJmol^{-1}$ ஆகும்


**34.** $\overline{C^2} = \frac{3RT}{M}$ என்பது இலட்சிய வாயுக்கட்கு பொருத்தமானது. 400K யில் Ar வாயுவின் கதிவர்க்க இடை மூலமாக அமைவது இங்கு Ar = 40, இலட்சிய நடத்தை என்க.
1) $4.95 \times 10^2 ms^{-1}$  2) $4.95 \times 10^3 ms^{-1}$  3) $1.55 \times 10^2 ms^{-1}$
4) $2.49 \times 10^5 ms^{-1}$  5) $2.46 \times 10^2 ms^{-1}$

**35.** ஒரு குறித்த வெப்பநிலையில் $Hg_2Cl_2$ இன் கரைதிறன் $1 \times 10^{-4}\ moldm^{-3}$ எனின் அதன் கரைதிறன் பெருக்கம
1) $4 \times 10^{-12}\ mol^4dm^{-12}$  2) $1 \times 10^{-8}\ mol^2dm^{-6}$  3) $4 \times 10^{-12}\ mol^3dm^{-9}$
4) $2.5 \times 10^{-12}\ mol^3dm^{-9}$  5) $1 \times 10^{-12}\ mol^3dm^{-9}$

**36.** $25^0C$ யில் $NH_3(aq)$ இன் $K_b = 1 \times 10^{-5}\ moldm^{-3}$. எனில் இவ்வெப்பநிலையில் 0.1 $moldm^{-3}$ $NH_4Cl(aq)$ இன pH ஆக அமையப் பொருத்தமானது. ($K_w = 1 \times 10^{-14}\ moldm^{-3}$)
1) 5  2) 9  3) 4  4) 3  5) 10


**37.** $25^0C$ யில் $CH_3COOH(aq)$ இன் 0.40$moldm^{-3}$. கரைசலின் pH ஆனது 3.0 ஆக அமைந்தது. எனில் இவவெப்பநிலையில் 0.1 $moldm^{-3}$ கரைசலின் pH ஆக அமையப் பொருத்தமானது. ($10^{0.3} = 2$)
1) 2.7  2) 1  3) 3.3  4) 11.3  5) 3.6

**38.** P, Q எனும் இரு உலோகக் கோல்கள் பின்வருமாறு இணைக்கப்பட்டன.எனின் பின்வரும் எச்சோடியானது உவோற்றுமானி வாசிப்பு உயர்வாகும்?




| | 1) | 2) | 3) | 4) | 5) |
|---|---|---|---|---|---|
| கோல் P | Ag | Cu | Ag | Mg | Cd |
| கோல் Q | Zn | Zn | Mg | Au | Cu |

**39.**




இரு இரும்புத்துண்டங்கள் மேற்காட்டியவாறு இணைக்கப்பட்டன எனில் இது பற்றிய கூற்றுக்களில் சரியானது
(a) A அருகில் நீலநிறம் , B யின் அருகில் இளம் சிவப்பு
(b) A அருகில் இளம்சிவப்பு , B யின் அருகில் நீலம்
(c) A அனோட் , B கதோட்
1) a மட்டும்  2) b மட்டும்  3) c மட்டும்
4) a , c இரண்டும் மட்டும்  5) b , c இரண்டும் மட்டும்

**40.** $S_2O_8^{2-}(aq)$ அயன்கட்கும் $I^-(aq)$ இடையிலான தாக்கம் பின்வருமாறு நடைபெறும்.

$S_2O_8^{2-} + 2I^- \rightarrow I_2(aq) + 2SO_4^{2-}(aq)$ இத்தாக்கத்தின் படிமுறைகள் பின்வருமாறு

$2I^- \rightarrow I_2 + 2e$ ; $S_2O_8^{2-} + 2e \xrightarrow{Fast} 2SO_4^{2-}$


| $25^0C$ யில் | ஆரம்ப செறிவுகள் | | $I_2$ சார்பான தாக்கவீதம் / $millimoldm^{-3}s^{-1}$ |
|---|---|---|---|
| | $S_2O_8^{2-}(aq)$ | I-(aq) | |
| 1. | 0.5M | 0.5M | 2 |
| 2. | 1.0M | 2.0M | x |



ஆயின் x இன் பெறுமானம்
1) 32  2) 8  3) 16  4) 4  5) 2


வினா 41 முதல் 50 வரை வழிகாட்டல் அட்டவணை

| விடை: | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| | a,b மட்டும் சரி | b,c மட்டும் சரி | c,d மட்டும் சரி | d,a மட்டும் சரி | வேறு ஏதாவது |

**41.** பின்வரும் தாக்கங்களைத் தரக்கூடிய சேதனச் சேர்வை/சேர்வைகள்
1) Na உடன் வாயு வெளியேற்றும்  2) $Na_2CO_3$ உடன் தாக்கம் இல்லை
3) வன்ஒட்சியேற்றத்தில் ஈர்காபொட்சிலிக்கமிலத்தைத் தரும்




**42.** ஐதரோகாபன் X இல் திணிவுப்படி C:H = 12:1 மேலும் X ஆனது $Br_2(aq)$ நிறம் நக்கியது. எனின் X ஆக அமைய பொருத்தமானது / பொருத்தமானவை.
(a) $HC \equiv C - CH_2 - CH_2 - C \equiv CH$
(b) 
(c) $H_2C = C = CH - CH_2 - CH = CH_2$
(d) 

**43.** $C_xH_yO \xrightarrow{A} X \xrightarrow{B} Y \xrightarrow{H_3O^+}$ 

மேற்படி தாக்கப்படிகளில் பொருத்தமான சோதனைப்பொருட்களும் இடைவிளைவுகளும் அமையுமிடத்து
X , Y இன் பெறுமானங்கள்

| | x | y |
|---|---|---|
| (a) | 3 | 6 |
| (b) | 4 | 6 |
| (c) | 5 | 12 |
| (d) | 4 | 10 |

**44.** 0.1mol $H_2(g)$ உம் 0.1mol $I_2(g)$ உம் ஆரம்பத்தில் எடுக்கப்பட்டு வெப்பநிலை T யில் பின்வரும் சமநிலை அடையவிடப்பட்டபோது ஏற்படும் மாற்றம் அருகே வரைபில் உண்டு.
$H_2(g) + I_2(g) \quad 2HI(g)$ எனில் இதுபற்றிய கூற்றுகளில் உண்மையானது/உண்மையானவை
(a) சமநிலையில் $I_2(g)$ இன் மூல்பின்னம் 0.125
(b) சமநிலையில் HI இன் மூல எண்ணிக்கை 0.075
(c) $K_p = 12$
(d) $K_c = 36$




**45.** பின்வரும் செயற்பாடுகளில் எது / எவை சமநிலையைக் காட்டுகின்றன?
(a) NaOH(s) இன் நீரில் கரைசலாக்கம்
(b) $C_6H_6$ ஐயும் நீரையும் கொண்ட தொகுதி
(c) $Zn(s) / ZnSO_4(aq)$
(d) வளிமண்டல $O_2(g)$ இன் ஒரு பகுதி நீரில் கரைதல்.

**46.** $1 \times 10^{-3} moldm^{-3}$ NaOH(aq) இனை $1 \times 10^{-3} moldm_3$ HCl(aq) ஆல் நியமிக்கும்போது உகந்த காட்டி / காட்டிகள
(a) மெதயில் செம்மஞ்சள்  (b) மெதயில் சிவப்பு
(c) கிரசோல் சிவப்பு  (d) பினோப்பதலீன்

**47.** கற்றயன்களின் பண்பறிபகுப்பில் கூட்டம் II இன் வடிதிரவத்திற்கு $HNO_3$ சேர்த்து பின் கொதிக்க வைத்து $NH_4Cl$ சேர்த்து பின்பு $NH_3(aq)$ மிகையாக சேர்க்கப்படும். இச்செயற்பாட்டின் நோக்கங்கள் பற்றிய தவறான விளக்கமாக அமைவது,
(a) $HNO_3$ சேர்ப்பது $Fe^{2+}$ ஐ $Fe^{3+}$ ஆக மாற்ற
(b) கொதிக்க வைத்தல் $H_2S$ ஐ அகற்ற
(c) $NH_4Cl$ சேர்க்காது $NH_3(aq)$ சோப்பின் வேறு வீழ்படிவுகளும் உருவாகும்
(d) $NH_4^+$ அயன்களை பயன்படுத்தி $NH_3(aq)$ இன் கூட்டப்பிரிகை குறைக்ககப்படும்

**48.** $SF_6$ பற்றிய கூற்றுகளில் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
(a) கந்தகத்தின் ஈற்றோட்டில் 18 இலத்திரன்கள் உண்டு
(b) கந்தகத்தின் ஈற்றோட்டில் 12 இலத்திரன்கள் உண்டு
(c) கந்தகத்தின் சூழவுள்ள அணுக்கள் எண்முகி அமைப்புக்குரியன.
(d) கந்தகத்தின் ஒட்சியேற்ற எண் -6

**49.** பின்வரும் மின்வாய்களின் நியம மின்வாய் அழுத்தங்கள் கீழேயுண்டு.
$Sn^{2+} / Sn = -0.14V$  $Hg^{2+} / Hg_2^{2+} = +0.92V$  $Fe^{3+} / Fe^{2+} = +0.77V$
$Br_2(g)Pt / Br = 1.07V$
எனின் பின்வரும் தாக்கங்களில் நடைபெறக்கூடியவை.
(a) $Sn + 2Hg^{2+} \rightarrow Sn^{2+} + Hg_2^{2+}$
(b) $2Fe^{2+} + 2Hg^{2+} \rightarrow 2Fe^{3+} + Hg_2^{2+}$
(c) $2Br + Sn \rightarrow Br_2 + Sn$
(d) $2Fe^{2+} + Br_2 \rightarrow 2Fe^{3+} + 2Br$

**50.** பின்வரும் எம்மூலக்கூற்றில் ஓரிடப்படுத்தப்படாத இலத்திரன்கள் (பரிவுத்தன்மை) உண்டு?
(a) $NO_2^+$  (b) $N_2O$  (c) $NO_2$  (d) $HNO_2$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையில் இடம்பெற்ற ஆண்களுக்கான கபடிச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சம்பியனான பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதும் காட்சிகள். *(படங்கள்: தேசன்)*

# மாவட்ட மட்டத்திலான கபடி இறுதிப்போட்டி; பருத்தித்துறை அபாரமாக ஆடிச் சம்பியனானது!

வலி.வடக்கு,ஜூலை4

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும்வரை பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியினரின் ஆதிக்கமே காணப்பட்டது. குறிப்பாக எதிரணியினரின் எல்லைக்குள் செல்வதிலும் எதிரணியினர் வரும்போது அவர்களைப் பிடிப்பதிலும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியினர் மிகவும் நுட்பமாக விளையாடித் தொடர்ந்து புள்ளிகளைப் பெற்றுக்கொண்டே இருந்தார்கள்.

முதல்பாதி ஆட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியினர் 60:01 புள்ளி என்ற அடிப்படையில் முன்னணியில் இருந்த நிலையில் முதல்பாதி ஆட்டம் நிறைவுபெற்றது. இந்த ஒரு புள்ளியை தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியினர் எல்லைப்புறத்தில் உள்ள தொடுகோட்டைத் தொட்டு திரும்பியமைக்காக வழங்கப்பட்டது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியே மீண்டும் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதி ஆட்டம் வேகம் குறைந்த ஓர் ஆட்டமாகவே காணப்பட்டது.

இரு அணிகளும் சற்றுச் சலிப்புடன் விளையாடினார்கள் என்றே கூறலாம்.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் கூட பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 43:03 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணியில் நிற்கும்போது ஆட்டம் நிறைவு பெற்றது. தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 03 புள்ளிகளையும் தொடுகோட்டைத் தொட்டதன் மூலம் பெற்றுக்கொண்டது.

ஆட்டநிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 103:04 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டு மாவட்டச் சம்பியனாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. (1-86)

## தாச்சிச் சுற்றுப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை4

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க அனுசரணையுடன் யூனியன் அசூரன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் கால் இறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் காலிறுதி ஆட்டம் ஒன்றில் மயிலிட்டி நியூகிட் வி.கவும் மானிப்பாய் பெஸ்புறம் வி.கவும் மோதுகின்றன.

நாளை இடம்பெறும் மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் உடுவில் இந்து வி.கவும் தாவடி காளியம்பாள் வி.கவும் மோதுகின்றன. (1-86)

# யாழ்.இந்து - கொக்குவில் இந்து மோதல்; நிருஜன் முதல் சதம் அடித்து அசத்தினார்



இ.நிருஜன்

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 17 வயதுப் பிரிவினருக்கான சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் இ.நிருஜன் தனது முதலாவது சதத்தைப் பெற்றுள்ளார். இந்தாண்டில் 17 வயதுப் பிரிவில் பெறப்பட்ட முதலாவது சதம் இதுவாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 48 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

நிருஜன் 10 நான்குகள் ஓர் ஆறு உட்பட நூறு ஓட்டங்களைப் பெற்றார். செந்தூரன் 2 நான்குகள் உட்பட 56 ஓட்டங்களையும் சுஜீபன் 03 ஆறுகள் ஒரு நான்கு உட்பட 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

உதிரிகளாக 51 ஓட்டங்களைக் கொக்குவில் இந்துக் கல்லூரி வழங்கியிருந்தது.

கார்த்திக் 9.4 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் நிரோஜன் 09 ஓவர்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். 246 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 40.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 138 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

யனுதாஸ் ஆறு நான்கு ஓட்டங்கள் உட்பட 51 ஓட்டங்களையும் பவிராஜ் 23, கோபிகன் 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

அச்சுதன் 2.3 ஓவர்கள் பந்துவீசி 07 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மயூலச்கன் 07 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 21 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிருஜன் 08 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் திருத்தணிகன் 08 ஓவர்கள் பந்துவீசி 33 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் செந்தூரன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள். (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### ஊர்காவற்றுறையில் மெய்வன்மைப் போட்டிகள்

ஊர்காவற்றுறை,ஜூலை4

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நாளையும் மறுதினமும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

பிரிவுக்குட்பட்ட 50இற்கு மேற்பட்ட கழகங்கள் இந்தப் போட்டிகளில் பங்குபற்ற இருக்கின்றன. இந்தப் போட்டிகளில் தெரிவாகும் கழகங்கள் மாவட்டப் போட்டிக்குப் பங்குபற்றும். (1)

# மெய்வன்மைப் போட்டிகள் இன்று கொழும்பில் ஆரம்பம்; யாழ்.வீரர்கள், வீராங்கனைகள் செல்லமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,ஜூலை4

இலங்கை மெய்வன்மைச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் சிரேஷ்ட வீர, வீராங்கனைகளுக்கான தடகளப் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீரர்,வீராங்கனைகள் கலந்துகொள்ளவில்லை.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மூன்று நாள்கள் கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு யாழ்.மாவட்ட வீரர், வீராங்கனைகள் விண்ணப்பங்கள் அனுப்பி கலந்துகொள்ளவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

இறுதி நேரத்தில் வீரர், வீராங்கனைகள் செல்வதற்கான பயணக் கட்டணம் வழங்கப்படாமையால் வீரர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தாண்டு இடம்பெற்ற போட்டிகளில் கலந்துகொண்ட யாழ்.வீரர், வீராங்கனைகள் பல இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கனிஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டிகளில் கலந்துகொண்ட வீரர், வீராங்கனைகளுக்கான போக்குரத்துச் செலவை இலங்கை மெய்வன்மைச் சங்கம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

# கடைசி நிமிட அதிரடி ஆட்டத்தால் வெற்றிவாகை சூடியது தூயஒளி

ஊர்காவற்றுறை,ஜூலை4

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் செயலகத்திற்கு உட்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்துச் சுற்றுப்போட்டியில் கரம்பொன் ஞானஒளி விளையாட்டுக் கழகம் போராடி வென்று சம்பியனைச் சுவீகரித்துக்கொண்டது.

கரம்பொன் ஞானஒளி விளையாட்டுக் கழகம் அரையிறுதிப் போட்டியில் அனலைதீவு அருணோதயா விளையாட்டுக் கழகத்தை 12:2 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தெரிவாகியது.

ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தை 12:5 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்குத் தெரிவாகியது.

இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற ஞானஒளி வி.கவும் சென்.ஜேம்ஸ் வி.கவும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் விட்டுக்கொடுக்காமல் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்று முதல்பாதி ஆட்ட முடிவில் 7:7 என்ற புள்ளி அடிப்படையில் சமநிலையில் நின்றன.

இடைவேளைக்குப் பின் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதிவரை யார் வெற்றி பெறுவார்கள் என்பதை முடிவு செய்யமுடியாத நிலையே காணப்பட்டது.

இரு அணியினரும் சளைக்காமல் ஆடிய போதும் ஆட்டம் முடிய ஒரு நிமிடம் வரை 7:7 என்ற புள்ளி அடிப்படையில் சமநிலையில் நின்றன.

ஆட்டம் முடியும் கட்டத்தில் ஞானஒளி அணியினர் பந்தை லாவகமாக வலைக்குள் வீழ்த்தி அசத்தினர். இறுதியில் 8:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

இந்தக் கழகம் முதல் தடவையாக இவ்வருட போட்டியில் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது. (1-325-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 131 ஆண்டுகளுக்கு

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டுப் போட்டிகளுக்கு உரிய மைதானம் இல்லை. தனியார் காணியில் பாடசாலை மட்டத்தில் போட்டிகள் இடம்பெறும் நிலைமையே காணப்படுகின்றது.

கோட்ட மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு உரிய வசதிகள் இன்மையால் போட்டிகளில் கலந்து கொள்வதில்லையெனவும் குறிப்பிட்டார்.

உலக உணவுத் திட்டம் என்பது எமது பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் வேண் டிய ஒன்றாகும். உணவுத்திட்டத்திற்கு பெற்றோர்கள் சமையல் ரீதியாக உதவி செய்கிறார்கள். பெற்றோரான தருமராசா என்ற விவசாயி தான் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை வழங்கியும் வருகின்றார்.

மாணவர்கள் ஆசிரியர்களுக்கான மலசல கூடம் பற்றாக்குறையாகவே காணப்படு கின்றது. தற்போது பயன்பாட்டில் உள்ள மலசல கூடங்களும் கூட திருத்தப்பட வேண்டியவைகளாகவே காணப்படுகின்றன.

நல்லூர் கல்விக் கோட்டமும் யாழ்.கல்வி வலயமும் தங்களால் செய்யக்கூடிய உதவிகளை முழுமையாக செய்துவருகின்றார்கள். பயிற்சிப் புத்தகங்கள் உட்படக் கட்டட ரீதியாகவும் உதவுவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

தண்ணீர் நீர்த்தாங்கி மூலம் தண்ணீர் பெறப்படுகின்ற போதிலும் கிணறு பாதுகாப்புச் செய்யப்பட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்கள் இங்கு கற்பதால் கிணற்றின் மேல் புறம் மூடி பாதுகாப்புச் செய்யவேண்டும்.

திறந்த மண்டபத்தில் வகுப்பறைகள் இருக்கின்றன. தற்போது வகுப்பறைகள் பிரிப் பதற்கு வைக்கப்பட்டுள்ள தடுப்புகள் பழுதடைந்து காணப்படுகின்றன. இவைகள் திருத் தம் செய்யப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்களின் சுகாதார நடவடிக்கைகளில் பொதுச்சுகாதார பரிசோதகர், அயலில் உள்ள வைத்தியசாலை வைத்தியர் மற்றும் பல் வைத்தியர் என அனைவரும் வருகை தந்து மாணவர்களின் ஆரோக்கியத்தில் அதிக கவனம் எடுத்து நடவடிக்கை களை மேற் கொண்டு வருகின்றார்கள்.

பாடசாலைக்குள் வீதியால் செல்லும் வாகனங்களினால் ஏற்படும் தூசுகளில் இருந்து மாணவர்களை பாதுகாக்க நடவடிக்கையெடுக்க வேண்டும். இத்துடன் சிறியளவிலான கட்டடத்தில் இருப்பதனால் இப்பாடசாலைக்கும் மேல் மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப் படுவது கூடிய பயனுடையதாகக் காணப்படும்.

உரிய காணி மற்றும் கட்டடம் இன்மையால் கணனி உட்பட பல உதவிகளையும் இழந்து பல தேவைகளுக்கும் உள்ளாகிய பாடசாலையாகவும் இது திகழ்வதாகவும் அதிபர் குறிப்பிட்டார்.

## வாராந்த சொற்பொழிவு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'சேக்கிழார் போற்றும் மகளிர்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும்.

செஞ்சொற் செம்மல் இரா.கேதீசன் சொற்பொழிவை நிகழ்த் துவார். (202-236)

## விழிப்புணர்வுக் கண்காட்சி

கோப்பாய், ஜூலை 4

போசாக்கு மாதத்தினை முன்னிட்டு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதி பாடசாலை மாணவர்களுக்கான போசாக்கு தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும். (202-72)


## மனோதத்துவ வைத்தியம் (CENERAL PSYCHOTHERAPHY)

**பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்**

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுக்கேற்றவாறு மருந்துகளைக் கொண்டு வருவார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவும், கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களை சந்தியுங்கள்.

Sexual Disorders (ஆண்மைச் சக்தி குறைவு)

(பிறவியிலே ஆண்மையற்றவர்களை தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியக் கோளாறுகளையும் மனோதத்துவ ரீதிழிலும், திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம்.

பலர் சுகமாகியுள்ளனர்.

**யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ பாலாஜி இன், 293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Contact No: 0777 569205.** (சி/553582)


## பருத்தித்துறை வைத்தியசாலை சிறுவர் விடுதி திறப்பு

வடமராட்சி, ஜூலை4

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் புனரமைக்கப்பட்ட சிறுவர் விடுதி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் விடுதியைத் திறந்து வைப்பார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் நிதிமூலம் ஊழியர்கள், உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் விடுதி புனரமைக்கப்பட்டுள்ளது. (202-236)

## அமுது செய்வித்த அன்பர்

ஞானக்கதிர்

விருந்தோம்பல் நல்ல பண்பாகும். செல்வம் குறைந்து வறுமையடையும் போது தானம் செய்வது அரிதாகும். ஆனால், கொடிய வறுமை நிலையிலும் விருந்தினராய் வந்த சிவனடியார்களைச் சிறப்பாக வரவேற்று அமுதூட்டியவர் இளையான் குடிமாறநாயனார். அவர் வேளாண்மை செய்து வந்தார். சிவபெருமான் திருவடிகளை என்றும் நினைந்து சிவபக்தியிற் சிறந்து விளங்கினார். வேளாண்மை செய்வதன் மூலம் அளப்பரிய செல்வம் அவரிடம் சேர்ந்தது. இச்செல்வத்தின் மூலம் சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதைப் பெருந் தொண்டாக அவர் மேற்கொண்டார். அவர் சிவனடியார் பாற் பேரன்பு கொண்டு குலங்குடி ஒன்றுங் கருதாது அவர்களிடம் அன்பு பாராட்டுவார். சிவனடியார்கள் தம்மை நாடி வரும் போது முகம் மலர்ந்து, கைகள் குவித்து இனிய சொற்களை அவர்கள் மகிழும் படி கூறி அவர்களை வரவேற்பார். பின் அவர்கள் திருவடிகளைக் கழுவி, ஆசனத்தில் இருத்தித் திருவடி பூசை செய்வார். கைப்பு, புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு ஆகிய அறுசுவை உணவினை உண்ணுதல், தின்னுதல், நக்குதல், பருகுதல் என்ற நால்வகையாக உட்கொள்ளக் கூடியவாறு வழங்குவார். அவ்வாறு சிவனடியார் உள்ளம் மகிழும் வகையில் நாள் தோறும் அவர்களுக்கு அமுது படைத்ததால் அவருடைய செல்வமும் பெருகிற்று. அழகாபுரிக்குத் தலைவனான குபேரன் போல அவர் செல்வச் சிறப்புடன் வாழ்ந்தார்.

சிவபெருமான், மாறனார் வறுமை வந்துற்ற போதும் அடியார்க்கு அமுது படைக்கும் தொண்டைச் செய்ய வல்லர் என்பதை உலகுக்கு காட்டத் திருவுளங் கொண்டார். மாறனாரிடம் உள்ள செல்வத்தைப் படிப்படியாகக் குறையச் செய்தார். வறுமை நிலையும் வந்துற்றது. வளம் சுருங்கிய காலத்திலும் மனம் சுருங்காமல் உள்ள பொருள்களை விற்றும், கடன்கள் வாங்கியும் அடியார் பூசையாகிய ஒப்பற்ற மாகேசுர பூஜையைச் சிறப்பாகச் செய்து வந்தார்.

இவ்வாறு சிவனடியார்க்குத் தொண்டாற்றி வரும் போது விடையேறி வராமலும், உமை அம்மையார் உடன் வராமலும் சிவபெருமான் அடியார் வேடம் பூண்டு, நாயனார் இல்லம் வருகின்றார். காலமோ மாரிக்காலம் நேரமோ நள்ளிரவு மாறனார் நிலையோ பலகாலமாகப் பட்டினி. கதவும் அடைபட்டிருந்தது. இவ்வேளையில் அடியார் கதவைத்தட்ட, அதனைத் திறந்து அவரை மாறனார் வரவேற்றார். தமது நிலையை நினைத்து வருத்தத்துடன் உள்ளொன்று கொண்டு, புறமொன்று பேசி அடியவரை மாறனார் வரவேற்கவில்லை பேரன்புடனேயே அவரை வரவேற்றார். மனைவியிடம் சென்று "சிவ அன்பர் சாலவே பசித்தார். நமக்கு இங்கு உணவு இல்லாவிடினும் இறைவன் அடியாருக்குத் திருவமுது படைக்க வேண்டுமே, என் செய்வது?" என வினாவினார் அதற்கு அம்மையார். "கையிலும்பொருள் இல்லை. கடன் கொடுப்பாரும் இல்லை.நேற்று முன்தினம் வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் முடிந்தளவு அமுதாக்க முயல்வேன். இது தவிர வேறொன்றும் தெரியவில்லை" எனக் கூறினார்.

நாயனாரும் மகிழ்ச்சியுடன் வயலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு விரைந்து இல்லம் திரும்பினார். விறகுக்காகத் தமது வீட்டின் கூரையிலுள்ள தடிகளை எடுத்துக் கொடுத்தார். கறிக்கு என் செய்வோமென வினவிய மனைவிக்கு வீட்டின் பின்புறம் இருந்த கீரைப் பயிர்களை வேரோடு பறித்துக் கொடுத்தார். மனைவியாரும் அவற்றைக் கழுவித் தம் கைத்திறனால் கறிகள் பல சமைத்தார். பின் அடியாருக்கு அமுது படைக்கலாமெனக் கணவரிடம் கூறினார். துயிலும் அடியாரை மாறனார் எழுப்பினார். அவ்வளவில் வந்த அடியவர் "சோதியாய்த்" தோன்றினார். மாறனாரும் மனைவியாரும் திகைத்து நின்றார்கள். சிவபெருமான் உமாதேவியாருடன் இடப வாகனத்தில் அவர்களுக்குக் காட்சி கொடுத்தார். அன்பர் பூசை செய்த இருவரும் இறைவனின் திருக்கைலாயத்து இன்புற்று வாழும் பேறு பெற்றனர்.

வறுமையிலும் சிறுமையின்றி மாறனார் அடியவருக்கு அன்னம் படைத்தார். தொண்டர் உள்ளத்தில் எப்போதும் உறைகின்றவர் இறைவன். எனவே தான் தொண்டர் வழிபாட்டில் அண்டர் நாதனைக் கண்டு இன்புற்றார் மாறனார். இறைவன் திருவருள் பெறுவதற்கு அடியவர்களைத் துணை கொள்ள வேண்டும். அந்நிலையில் "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியவர் தமை அமுது செய்வித்தல்" என்பதற்கு இணங்கவே மாறனார் வாழ்ந்தார்.

நன்றி: ஞானச்சுடர்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி / யோகமதி இராசமுத்து மயில்வாகனம் (இராசப்பு மாஸ்ரர்)

தாயின் மடியில் 10.03.1961

ஆண்டவன் அடியில் 15.07.2007

ஆண்டு ஒன்று கழிந்ததம்மா ஆண்டவன் பாதம் நீ சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறிடுமா எம் துயரம்.

'மதிமனை', கோப்பாய் தெற்கு, கோப்பாய். (76013)

உன் பிரிவால் வாடும்: அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர்கள், பெறாமக்கள்.



## கூட்டுறவு நகர் திறப்பு விழா அழைப்பு

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

**Coop City**

இடம்: பிரதான வீதி, சங்கானை

காலம்: 05.07.2008 சனிக்கிழமை

நேரம்: முற்பகல் 11.00 மணி

கூட்டுறவாளர்கள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

(சி/553581)



## தவறிவிட்டது

நாகேஸ்வரி வீரவாகு என்பவருடைய தே.அ. அட்டை (476653274X), விஷேட அ.அ. (091016109) என்பன 02.07.2008 அன்று யாழ்.நகர், பெரியகடை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: வா.வீரவாகு, (76011)
சாவகச்சேரி வடக்கு, மீசாலை. 0777048328

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் அரசாங்க சேவையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் 81ஆம் ஆண்டு, அத்த நட்சத்திரத்தில் பிறந்த மகனுக்கு பெற்றோர் பண்பானதும் அழகானதுமான மணப் பெண்ணை விரும்புகின்றனர். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

விள.இல.: 3111, மே/பா.உதயன்.

## விற்பனைக்கு

டொல்பின் வாகனத்திற்குரிய 3வரி ஆசனங்கள் (சீற்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.உதயன்,
418, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9141 (76015)

## SINHALA CLASSESS

Spoken Sinhala & G.C.E.– O/L

By: Leela Krishnan

ஆரம்பம்: 09.07.2008
நேரம்: 11.00 மணி
Jaffna College Undergraduate Dept
464, Hospital Rd. Jaffna. (சி/553583)



## நெஞ்சகலா ஓராண்டு நினைவுகள்

அன்னையின் மடியில் 27 . 04 . 1944



ஆண்டவன் அடியில் 04 . 07 . 2007

யாழ்.சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை சென்.தோமஸ் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் அகஸ்ரின் நீக்கிலஸ் யேசுநேசன் (வில்சன்)

(கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்)

அன்பிலுயர் இதயமாக மண்ணில் வாழ்ந்திருந்தீர்!
அன்பு மொழி பேசி எம்மை அரவணைத்திருந்தீர்!
அப்பாக டடா என்று நாம் அழைப்பதில் மகிழ்ந்திருந்தீர்!
அத்தனையும் மறந்து எம்மை விட்டு சென்றுவிட்டீர்!
துன்பமே தெரியாமல் எங்களைக் காத்து வந்தீர்!
துயரத்தில் வாழ விட்டு இறைவனில் இணைந்து விட்டீர்!
எங்களை காப்பேன் என்று நிதமும் கூறி வந்தீர்!
எண்ணில்லா துயரத்தில் வாழ வைத்து விட்டீர்!
ஆண்டொன்று ஓடி மறைந்ததை நாம் எண்ணி
ஆறாது நெஞ்சம் தாங்காமல் சொரிகின்றதே கண்ணீர்.

சென்.தோமஸ் லேன், பருத்தித்துறை.

மனைவி- ஞானம்,
பிள்ளைகள்: றெஜினா செறின், சின்றியா வேஜினி, மரியதர்சினி.

(சி/553585)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழ் மக்களை 'விடுவித்து' சிறை வைக்கும் நடவடிக்கை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப் பிரதேசத்தையும் அவர்களின் பிடியிலிருந்து விடுவித்து, அரசப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு மிகவும் முனைப்பாகவும் தீவிரமாகவும் உறுதியாகவும் உள்ளது.

இதன் காரணமாக வன்னி மீது பெரும் யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விட அது தயாராகி வருவதும் வெளிப்படை.

ஆனால் தமது இந்த நடவடிக்கை யுத்தமே அல்ல என்று அரசுத் தலைவர் சாதிக்கின்றார்.

''அப்பாவித் தமிழர்களைப் புலிகளின் பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் அரசின் மனிதாபிமான நடவடிக்கையே இது. சிலருக்கு இது யுத்தம் போலத் தெரிகின்றது.'' - என்று தமது படைகளின் நடவடிக்கையைச் சிலாகித்து, அதற்கு மகுடம் சூட்டுகிறார் அரசுத் தலைவர்.

இந்தத் தாக்குதல் நடவடிக்கையை ஜனநாயகத்தை மீட்கும் உன்னதப் பணி என்று புகழாரம் சூட்டவும் அவர் தவறுவதில்லை. கிழக்கைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவித்து, அங்கு ஜனநாயகத்தை மலரச் செய்து விட்டவராகத் தம்மை முன்னிறுத்தவும் அவர் பின்நிற்பதில்லை. அதே வெற்றியை வடக்கிலும் தாம் விரைவில் ஈட்டுவார் என்றும் அவர் சூளுரைக்கின்றார்.

இந்த மனிதாபிமானப் பணியின் - ஜனநாயக மீட்பின் மாண்பின் - பயங்கரவாதத்தின்பிடியிலிருந்து மக்களைவிடுக்கும் அரிய தீரச் செயலின் - 'சீத்துவம்' எத்தகையது என்பதை சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் அப்பட்டமாக வெளிப்படுத்தி அம்பலப்படுத்தியிருக்கின்றது.

அரசுத் தலைவர் கூறுகின்றமை போல வன்னியின் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வசிக்கும் மக்கள் புலிகளின் பிடியிலிருந்து 'விடுவிக்கப்பட்டால்', அந்த மக்களுக்கு எத்தகைய மனிதாபிமான மாண்பு - எத்தகைய ஜனநாயக உரிமைகள் - எத்தகைய விடுதலை வாழ்வு - காத்திருக்கின்றன என்பதை உதாரணத்தோடு தோலுரித்துக் காட்டி அம்பலப்படுத்தியிருக்கிறது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

அண்மைக்கால படை நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திலிருந்து வெளியேறி, அரசப் படைகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து சேர்ந்த சுமார் நானூறு தமிழர்கள் மன்னார் மாவட்டம் கள்ளிமோட்டையில் நலன்புரி நிலையம் என்ற பெயரிலான தடுப்பு முகாம் ஒன்றில் எவ்வாறு 'சிறை'வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை விலாவாரியான விவரங்களோடு வெளிப்படுத்தியிருக்கின்றது அந்த அமைப்பு.

இலங்கை அரசு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேறிவரும் மக்களை 'கிரிமினல்கள்' போல தடுத்து வைத்து நடத்துகின்றது என்று குற்றம் சுமத்தியுள்ள அந்த அமைப்பு, அதையொட்டிய விவரங்களையும் விரிவாக வெளியிட்டிருக்கின்றது.

இனப்பிணக்குகளில் சிக்கி, உள்நாட்டுக்குள் இடம் பெயரும் அகதிகளைக் கண்மூடித்தனமாகத் தடுத்து வைப்பதும், அவர்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்குத் தேவையற்ற தடைகளை விதிப்பதும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களுக்கும் சர்வதேச மனிதாபிமான - மனித நேய- ஒழுங்கு விதிகளுக்கும் முரணானவை என்று சுட்டிக்காட்டும் அந்த அமைப்பு, இந்த ஏற்பாடுகளுக்கு முற்றிலும் முரணாக அந்த அகதிகள், கைதிகள் போல தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இலங்கை அரசுத் தரப்பின் மீது குற்றமும் சுமத்தியிருக்கின்றது.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' - என்பார்கள்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களை அவர்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்போவதாகக் கூறும் அரசு, அப்படி அந்தத் தமிழ் மக்களை புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து 'விடுவித்து' எப்படிச் 'சிறை' வைக்கப் போகின்றது என்பதற்கு மன்னார் மாவட்டம், கள்ளிமோட்டை தடுப்பு முகாம் நல்லதோர் உதாரணம்.

தலைநகர் கொழும்பில் தமிழர்கள் வகை தொகையின்றிக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படுவது, கொழும்பிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்படுவது போன்றவை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரித்த உயர்நீதிமன்றம், வடக்கிலிருந்து கொழும்புக்கு வரும் மக்களின் போக்குவரத்துக்குத் தடை விதிக்கக் கூடாது என்று தனது தீர்ப்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தமை தெரிந்த விடயமே.

வடக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வெளியேறி தென்னிலங்கை நோக்கி வர எத்தனிக்கும் பொதுமக்களைத் தடுத்து இப்படி சிறை வைப்பதும் - எந்தச் சட்டவிதிகளின் கீழும் வராத தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் - நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் நடவடிக்கையாக அர்த்தப்படுத்தப்படக் கூடியதே.

இப்படி நானூறு தமிழர்கள் - கொத்தாக - ஒன்றாக - சிறைவைக்கப்படுவதினின்றும் மீட்சி பெறுவதற்கும் உயர் நீதிமன்றத்தின் உதவியைத்தான் இனி நாட வேண்டும் போல.

எனவே புலிகளின் பிடியிலிருந்து மக்களை 'விடுவித்து', இப்படி சிறை வைக்கும் எத்தனம் தொடருமானால் அந்த மக்களைப் பொறுத்தவரை அவர்கள் 'சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதை' தான் யதார்த்தம் என்றாகி விடும்.

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# லயன்ஸ் கழகத்தால் அமைக்கப்பட்ட 200 வீடுகள் விரைவில் கையளிக்கப்படும்

யாழ்.மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென லயன்ஸ் கழகத்தினால் அமைக்கப்பட்டுவரும் வீடுகளில் 200 வீடுகள் விரைவில் அந்த மக்களிடம் கையளிக்கப்படும்.

யாழ்.மாவட்ட லயன்ஸ் கழகத்தின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி வை. தியாகராஜா இதனைத் தெரிவித்தார்.

லயன்ஸ் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர மக்களுக்கு 442 வீடுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டது. அதன் பிரகாரம் அவ்வீடுகளின் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வீடு ஒன்றிற்கு மொத்த மாக 7.5 லட்சம் ரூபா தேவைப்படுகிறது. இதில் 5லட்சம் ரூபா பணத்தை சர்வதேச லயன்ஸ் கழக நிதியம் வழங்குகின்றது. மிகுதிப் பணம் 2.5 லட்சம் ரூபாவை உலக வங்கி வழங்கி வருகின்றது. இவ்வீடுகள் வடமராட்சிப் பகுதியில் கட்டப்பட்டு வருகின்றன. இதில் 200 வீடுகள் சில மாதங்களுக் குள் அனைத்து வேலைகளும் பூரண மாக முடிவடைந்து உரியவர்களிடம் கையளிக்கப்படும்.

இவ்வீடுகள் விரைவாக பூரணப்படுத்த முடியாமல் தாமதமாவதற்கு பொருளாதாரப் பிரச்சினை, சிமெந்து வரஎடுக்கும் கால அவகாசம் ஆகியவை காரணமாகும். அத்தோடு அவற்றை போதியளவு எடுத்துவர முடியவில்லை. வீடு மட்டும் அல்ல கிணறு, மலசல கூடம், மின்சாரம் போன்ற வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

இப்பணிகளை நெறிப்படுத்துவதற்கு எமது லயன் கழகத்தில் 6 மூத்த உறுப்பினர்களைக் கொண்ட சுனாமி வீடமைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட அபிவிருத்திக்கு எமது லயன் கழகம் ரூ. 22.1 கோடி நிதியை பயன்படுத்தியுள்ளது.

மக்கள் நலன்கருதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நடமாடும் கண் சிகிச்சைப் பிரிவிற்கு உகந்த வாகன வசதியையும் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவிற்கு எமது கழகம் 1.25 லட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளது - என்றார்.

மாவட்ட இணைப்பாளர்களான எஸ். துரைராஜா, ரி.சற்குணராஜா, எஸ். தங்கராஜா, செயலாளர் எம்.சோமசுந்தரம், உறுப்பினர்களான எவ்.சில்வேஸ்ரர், எம்.ஜனக்குமார் ஆகியோரும் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர். (50-25)

# பயங்கரவாதம் என அழைக்கப்படும் இனப்பிரச்சினைக்கு தீர்வைக்காண யுத்தத்தை நிறுத்திப் பேச்சை ஆரம்பிக்கவும்

## இப்படிக் கோருகின்றது புதிய ஜனநாயக் கட்சி

கொழும்பு,ஜூலை4

பயங்கரவாதம் என பெயர் மாற்றி அழைக்கப்படும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வைக் காண யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். அதே வேளை அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைத் தடுத்து நிறுத்தி மக்களின் வாழ்க்கைச் செலவு, சுமையைக் குறைக்க தேசிய பொருளாதாரக் கொள்கை முன்னெடுக்கப்படவேண்டும்.

புதிய ஜனநாயகக் கட்சியின் 30 ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்சியின் மத்திய குழு வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கான அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொடிய யுத்தத்தை முன்னெடுத்து வருவதாலும் நவதாராள பொருளாதார முறைமையை நடைமுறைப்படுத்துவதாலும் மக்கள் அதல பாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டு வருகின்றனர்.

தவறான அரசியல், பொருளாதார, இராணுவக் கொள்கைகளை முன்னெடுக்கும் ஆட்சி அதிகாரத்தில் இருப்போருக்கும் அதே அதிகாரத்தை வெவ்வேறு வடிவத்தில் நடைமுறையாக்கிக்கொள்ள எத்தனிப்போருக்கும் எதிராகப் பாரிய எதிர்ப்பு அழுதங்களைப் கொடுக்கும் மக்கள் இயக்கங்கள் உருவாகவேண்டும்.

அந்நிய பல்தேசியக் கம்பனிகள் நாட்டின் வளங்களைக் கொள்ளையிட்டுச் செல்வதுடன் தொழிலாளர்களின் உழைப்பையும் சுரண்டிச் சென்ற வண்ணமுள்ளன. நாட்டின் விவசாயம் சீரழிக்கப்பட்டு இறக்குமதி நுகர்வுச் சந்தை விரிவாக்கப்பட்டது. இதனால் விவசாயிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட எமது நாட்டில் அவர்கள் ஒட்டாண்டிகளாக்கப்பட்டுள்ளனர். அரிசி முதல் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்காக வெளிநாட்டுக் கப்பல்களை எதிர்பார்த்து நிற்கின்றனர். அத்துடன் அவற்றை அதிக விலை கொடுத்து வாங்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (202)

## இளவாலை திருமறைக் கலாமன்றக் கட்டடம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை 4

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்குடன் கலை, கலாசாரச் செயற்பாட்டை முன்னெடுக்கவென இளவாலை திருமறைக் கலாமன்றத்திற்கு திறந்தவெளிக் கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

இக்கட்டடத்தின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும். நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (202)

## தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை 4

இரத்மலானை தேசிய தொழில்நுட்பக் கல்லூரியும் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியும் இணைந்து நடத்தும் ஆங்கில சான்றிதழ் மற்றும் டிப்ளோமா பயிற்சிநெறிகள் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை -

சிங்களப் பயிற்சிநெறி ஆரம்பிப்பது தொடர்பான தகவல்கள் பின்னர் அறியத் தரப்படும் என்றும் மேலதிக விவரங்களைக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (202)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 21 | 05.07.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | பி.இ. 03.33 வரை |
| நட்சத்திரம் : | பூசம் |
| | மு.ப. 11.13 வரை |
| சுபநேரம் : | 02.58 - 04.28 |
| இராகுகாலம் : | 08.58 - 10.28 |

# உலக வங்கி வீட்டுத்திட்டப் பணிகளுக்கான சிமெந்து பங்கிட்டு வழங்கப்படுகின்றது

யாழ்ப்பாணம்,ஜூலை4

யாழ்.மாவட்டத்தில் உலக வங்கி வீட்டுத்திட்டப் பணிகளுக்கென எடுத்துவரப்பட்ட சிமெந்து பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட சிமெந்து பைக்கற் ஒன்று ஆயிரத்து 200 ரூபா விலையில் விநியோகம் செய்யப்பட்டது. இம்முறை ஆயிரத்து 450 ரூபாவுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை உலக வங்கித் திட்டத்தின்கீழ் வீடு கட்டுபவர்களுக்கு என சிமெந்து வழங்கப்பட்டபோதிலும் விநியோகத்தில் பிரதேச செயலகங்களும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களும் வேறுபட்ட நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதனால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

குறிப்பாக உலக வங்கி வீட்டுத்திட்டத்தின் பயனாளிகளின் வேலையை உடனடியாகப் பூர்த்திசெய்யக்கூடிய நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைப்படுத்துகின்றது. மற்றும் சில இடங்களில் பயனாளிகளின் தேவைக்கு ஏற்ப பங்கிட்டு விநியோகம் செய்யப்படுகின்றமையால் உலக வங்கி பயனாளிகள் கஷ்டங்களுக்கு உள்ளாகின்றார்கள்.

இதேவேளை வெளியில் சிமெந்துப் பைக்கற் ஒன்று 2 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதுடன் போதியளவு பெறமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது. (202-68)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,ஜூலை4

சித்தங்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய முன்பாகவுள்ள கடம்ப மரத்தடியில் கதிர்காம உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது.

கதிர்காமத் தீர்த்தத்தன்று அந்த ஆலயத்திலும் தீர்த்தம் இடம்பெறும். (202-28)

★ ★ ★

வடமராட்சி, ஜூலை 4

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை ஆதி வீரபத்திரகாளி கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

யுத்தச் சூழலில் பாதிக்கப்பட்ட இக்கோயிலை புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு பரிபாலன சபை தீர்மானித்ததையடுத்து பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (202-236)

★ ★ ★

நீர்வேலி,ஜூலை 4

நீர்வேலி தெற்கு மனோன்மணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆனிப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை, அபிஷேகத்துடன் ஆரம்பமாகிப் பொங்கல் உற்சவம் இடம்பெறும். (202-224)

★ ★ ★

வடமராட்சி,ஜூலை 4

துன்னாலை வடக்கு, அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய மணவாளக் கோல உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை சங்காபிஷேகத்துடன் நடைபெறவுள்ளது. (202-236)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை 4

நல்லூர், செல்லர் வீதி ஸ்ரீ சிவபூதராஜ சுவாமி ஆலய பாலஸ்தாபனம் இன்று காலை 7 மணி தொடக்கம் நடைபெறும். (202-207)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண வீக்கத்தின் தாக்கத்தைச் சீர் செய்வதற்கு கொமர்ஷல் வங்கியின் "சுப்பர் சேவர்" கணக்கு

## அதியுயர் வட்டியுடன் கூடிய சேமிப்பு

மதிநுட்பமான சேமிப்பாளர்களுக்கு பூரணமான செயற்பாட்டு நெகிழ்வுத் தன்மையுடன் அதிக வருமானத்தைத் தரக்கூடிய சேமிப்புக் கணக்கு இருக்க வேண்டியதன் அவசியத்தை கொமர்ஷல் வங்கி அடையாளம் கண்டபின் 12% வட்டியுடனான புதிய சேமிப்புக் கணக்கு ஒன்று அறிமுகம் செய்துள்ளது. "கொமர்ஷல் வங்கி சுப்பர் சேவர்" என வர்த்தகக் குறியீடு கொண்ட இப்புதிய சேமிப்புக் கணக்கு வருடாந்த விளைவு வீதமான (AER) 12.65% கொண்டிருப்பதுடன், பணமீட்பு எண்ணிக்கையில் கட்டுப்பாடுகளில்லாத குறைந்த பட்ச ஆரம்ப வைப்பாக 50 ஆயிரம் ரூபாவை வைப்புச் செய்ய் வேண்டுமென்று வங்கி அறிவித்துள்ளது.

புதிய திட்டம் பற்றி கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. அமித குணரத்ன விளக்குகையில் சாதாரணமான சேமிப்புக் கணக்குகளின் ஆர்வத்தை குறைக்கக் கூடிய பண வீக்கத்தின் தாக்கங்களை ஒரு விதத்தில் சீர் செய்வதற்கு நாட்டின் முன்னணி தனியார் துறை வங்கியினால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை இதுவாகும் என்றார்.

சேமிப்புத் திட்டம் எதுவுமே தற்போது நிலவும் பண வீக்கத்தை தோற்கடிக்க முடியாது என ஒப்புக் கொண்ட அவர், தவணை வைப்புக்கள் அல்லது அரசாங்க பிணைகளில் முதலீடு செய்யும் சந்தையில் இல்லாதவர்கள், நாளாந்த வங்கியியல் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய சாத்தியமான அதிஉச்ச வருமானத்தை நாடும் சனத்தொகையில் ஒரு பகுதியினரால் வரவேற்கப்படும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக இத்திட்ட அறிமுகம் அமைகின்றது என மேலும் தெரிவித்தார்.

கொமர்ஷல் வங்கி "சுப்பர் சேவர்" வழங்கும் 12%, உள்நாட்டு வங்கியியல் துறையில் சேமிப்புக் கணக்கின் மீது அளிக்கப்படும் மிகக் கூடுதலான வீதமாகும்.

"உண்மையை கூறுவோமாயின் இந்த வட்டி வீதம் மிகவும் நம்பிக்கைக்குரிய மிக ஸ்திரமான உள்நாட்டு வங்கி ஒன்றினால் வழங்கப்படுவதாலும் இது மிகவும் பலமான திட்டமாக அமையுமென்று நாம் நம்புகிறோம்" என்று கொமர்ஷல் வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ரவி டயஸ் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் எந்தப் பகுதியிலும், எந்நேரத்திலும் பண மீள்பெறுவனவை இலகுவாக்கும் தனிப்பெரும் ATM வலையமைப்பை கொண்ட வங்கியினால் இது வழங்கப்படுவது மற்றொரு முக்கியமான அம்சமாகும். மேலதிக நன்மைகளாக, "சுப்பர் சேவர்" அனைத்து கணக்கு வைப்பாளர்களுக்கும் இலவசமாக உடனடி CAT/debit அட்டை, இணையதள வங்கியியல் வசதி, **உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப வைப்புப் புத்தகத்தையோ அல்லது வங்கிக் கணக்கு கூற்றினையோ பேண முடியும் வசதி**, அவர்களின் கணக்கு மீதியில் 80% வரை துரிதமான தனிநபர் கடன் வசதி போன்றவை அமையும்.

கொமர்ஷல் வங்கியின் 314 க்கு மேற்பட்ட ATM கள் மற்றும் உலககெங்கிலுமுள்ள ஒரு மில்லியனுக்கு அதிகமான ATMகள் மூலமாக பண மீள்பெறுவனவு வசதி. சுப்பர் சேவர் கணக்கை எந்தக் கிளைகளிலும் அல்லது சுப்பர் மார்க்கெட் வங்கியியல் நிலையத்தின் மூலம் திறந்து கொள்ள முடியும். இன்றைய தொழில் சார் நிபுணர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ற அதி சௌகரியமான நிதித் திட்டமாக கொமர்ஷல் வங்கி "சுப்பர் சேவர்" திட்டம் விளங்குகிறது.

1969இல் ஆரம்பிக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி இலங்கையின் முன்னணி வங்கியாக நுகர்வோர் வங்கியியல், திறைசேரி மற்றும் பிணைகள் சந்தைகளில் செல்வாக்குமிக்க நிலைகளைக் கொண்டுள்ள இவ்வங்கி இலங்கையில் 165 கணனி இணைப்புள்ள கிளைகள், சுப்பர் மார்க்கெட் வங்கியியல் கருமபீடங்கள் மற்றும் சேவை நிலையங்கள் அடங்கிய வலையமைப்பினை கொண்டுள்ளதுடன், பங்களாதேசில் அதன் செயற்பாடுகள் ஒன்பது கிளைகளாக வளர்ச்சியடைந்துள்ளது. இவ்வங்கியை இலங்கையின் ஆண்டில் மிகச் சிறந்த வங்கியாக ஆறு தடவைகள் பிரபல உலக வங்கியியல் சஞ்சிகையான "த பாங்கர்" தரப்படுத்தியதுடன் இலங்கையில் மிகச் சிறந்த வங்கி என தொடர்ந்து பத்து ஆண்டுகளாக "குளோபல் பினான்ஸ்" என்ற அமெரிக்க சஞ்சிகை தரச் சிறப்பு வழங்கியது, 2007 ஜுலையில் இவ் வங்கி இலங்கையில் மிகச்சிறந்த வங்கி என "யூரோமணி" என்ற இன்னொரு புகழ்மிக்க சர்வதேச நிதி சஞ்சிகையினால் தரப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

### யாழ். வலயத்திலுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்குப் பயிற்சி

யாழ். வலயத்தின் கல்வி அபிவிருத்தி பிரிவினர் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பயிற்சிமுகாம்ஒன்றை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளனர்.

வலயப்பணிமனையின் முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு விசேட கல்விப் பிரிவு ஆசிரியரின் நெறிப்படுத்தலில் நடைபெறும் இந்த முகாமில் பெற்றோருக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் இணைந்து நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் அவர்களது பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கான அனுசரணை மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(202-302)

# மரண அறிவித்தல்

## சின்னையா நவரட்ணம்

(இளைப்பாறிய ஆசிரியர் மயிலிட்டி கலைமகள் மகா வித்தியாலயம், அங்கத்தவர் யாழ்.சிவதொண்டன் ஆச்சிரமம்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கட்டுவன் மயிலிட்டி தெற்கை வதிவிடமாகவும் பிரான்ஸை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சின்னையா நவரட்ணம் 29.06.2008 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் சீனியர் சின்னையா- உமையாத்தை தம்பதியரின் அன்பு மகனும் இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான திருமேனி- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இராசலட்சுமி, மகாதேவன், V.T.மகாலிங்கம் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் சிவயோகன், சிவகண நாதன் (கணன் - பிரான்ஸ்), சிவகௌரி (லண்டன்), சிவாஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் (செல்வி) புலவர் விசாலாட்சி (துர்க்கை அம்மன் கோயில்), பொன்னம்மா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவராஜா, நந்தினி, தேவராசா, மாலினி, பாமினி, வக்சலா, முருகதாஸ், தர்மசெந்தூர்வாசன் (வாசன்) ஆகியோரின் அன்பு மாமனும் பிரணவன், லக்ஷன், நிர்ஜா, கரிணி, சபரிகிரீசன், கரிசன், வருண், அருண் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.07.2008) சனிக்கிழமை11 மணிக்குபிரான்ஸில் (பிரான்ஸ் நேரப்படி) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குப்பிளான். (76022) குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் அந்தோனி பிரகாசம் இராஜேந்திரன்



மலர்வு 30.03.1959

உதிர்வு 04.06.2008

ஆண்டவரே என் ஒளி, அவரே என் மீட்பு! யாருக்கு நான் அஞ்சவேண்டும்! அவரே என் உயிருக்கு அடைக்கலம்.

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திச் சென்ற எமது அன்புத் தெய்வமே!

உமது ஆன்மா ஆண்டவரின் பாதத்தில் இளைப்பாற இறைவனை மன்றாடுகின்றோம்.

**அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (04.07.2008) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் யாழ்.புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

தற்காலிக முகவரி:
அ.பி.இராசரத்தினம்,
392/2, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

நிரந்தர முகவரி:
புனித அந்தோனியார் வீதி,
கிழக்குத் தெரு, ஊர்காவற்றுறை.

இவரின் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முக்கிய போட்டியில் ஜொலித்தது பாகிஸ்தான் 8 விக்கெட்டுகளால் இந்திய அணி படுதோல்வி

கராச்சி, ஜூலை 04

ஆசியக் கிண்ணத் தொடரின் வாழ்வா... சாவா போட்டியில் சாதித்துக் காட்டியது பாகிஸ்தான் அணி. யுனிஸ்கான் அதிரடிச் சதம் விளாச, இந்திய அணியை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. இதன் மூலம் இறுதியாட்டத்துக்கான வாய்ப்பை பாகிஸ்தான் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இந்தியப் பந்துவீச்சாளர்கள் சொதப்பியதால் வலுவான ஓட்டஎண்ணிக்கையை எட்டியும் பலன் இல்லாமல் போனது.

பாகிஸ்தானில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் கராச்சியில் நடந்த 'சுப்பர்-4' சுற்று போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. இது பாகிஸ்தானுக்கு மிக முக்கியமான போட்டி. இறுதியாட்ட வாய்ப்பைத் தக்க வைத்துக் கொள்ள கட்டாய வெற்றியை எதிர் நோக்கிக் களமிறங்கியது.

சொய்ப் மலிக் உடல் தகுதியில் தேறாதமையால் பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பை மிஸ்பா-உல்-ஹக் ஏற்றார்.

ஷேவாக், கம்பீர் இணைந்து இந்திய அணிக்கு அதிரடி ஆரம்பத்தைத் தந்தனர். தன்வீர் வீசிய முதல் ஓவரிலேயே கம்பீர் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். இவரது அடுத்த ஓவரில் ஷேவாக் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசினார். இவர்கள் இருவரும் அடித்து நொறுக்க ஓட்டஎண்ணிக்கை 'ஜெட்' வேகத்தில் எகிறியது. இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்காக 10.3 ஓவர்களில் 88 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் கம்பீர் 35 ஓட்டங்களுடன் இப்திகார் அஞ்சுமின் பந்துவீச்சில் வெளியேறினார்.

சிறிது நேரத்தில்-ஷேவாக் 49 ஓட்டங்களுடன் (33 பந்துகள், 6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) அப்துர் ரஹூப் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். இதே ஓவரில் சுரேஷ் ரெய்னாவும்(1) வெளியேற, இந்திய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 91 ஓட்டங்களை எடுத்துத் திணறியது. அடுத்துவந்த யுவராஜ் 37 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட மேலும் சிக்கலானது.

இதற்குப் பின் 5ஆவது விக்கெட்டில் இணைந்த அணித்தலைவர் டோனி, ரோகித் சர்மா பொறுப்பாக ஆடினர். இந்த ஜோடி தம்மிடையே 112 ஓட்டங்களைச் சேர்த்தது. இந்நிலையில் ரோகித் சர்மா 58 ஓட்டங்களுடன் இப்திகார் அஞ்சுமின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். மிகவும் நிதானமாக ஆடிய டோனி 96 பந்துகளில் 76 ஓட்டங்களை (4 பவுண்டரிகள்) எடுத்திருந்த நிலையில் சொகைல் தன்வீரிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

தொடர்ந்து களம்புகுந்த அண்ணன் யூசுப் பதான்(0) ஏமாற்றிய போதும், தம்பி இர்பான் பதான் கலக்கினார். அதிரடியாக விளையாடிய இவர், அணி 300 ஓட்டங்களைக் கடக்க உதவினார். இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 308 ஓட்டங்களை எடுத்தது. இர்பான் பதான் 25 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடின இலக்கைத் துரத்திய பாகிஸ்தான் அணிக்கு சல்மான் பட், நசிர்ஜாம்ஷெட் ஆகியோர் இணைந்து அதிரடி ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தனர். இருவரும் 8 ஓவர்களில்65 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் சல்மான் பட் (36), 'ரன் அவுட்' ஆனார். விளாசித் தள்ளிய ஜாம்ஷெட் 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது காயம் காரணமாக 'ரிட்டையர்ட் ஹேர்ட்' முறையில் பவிலியன் திரும்பினார். முகமது யூசுப் 21 ஓட்டங்களுடன் பியூஸ் சாவ்லாவின் சுழலில் விரைவாக வெளியேறினார்.

பின்னர் யுனிஸ்கான், மிஸ்பா இணைந்து கலக்கினர். அபாரமாகத் துடுப்பெடுத்தாடிய யுனிஸ்கான் சதம் கடந்து அசத்தினார். மறுபக்கம் கலக்கிய அணித்தலைவர் மிஸ்பா அரைச்சதம் கடந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 45.3ஆவது ஓவரில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 309 ஓட்டங்களைப் பெற்று அசத்தல் வெற்றி பெற்றது. யுனிஸ்கான் 123 ஓட்டங்களுடனும் (117 பந்துகள், 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்), மிஸ்பா 70 ஓட்டங்களுடனும் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். அணித்தலைவராகப் பொறுப்பேற்ற முதல் போட்டியில் வெற்றி பெற்று அசத்தியுள்ளார் மிஸ்பா. ஆட்ட நாயகன் விருதை யுனிஸ்கான் பெற்றார்.

இந்தப் போட்டியில் தோல்வியடைந்தமையால் இந்திய அணியின் இறுதியாட்ட வாய்ப்புக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. நேற்று நடக்க விருந்த போட்டியில் இலங்கையை வெல்லும் பட்சத்தில் இந்திய அணியின் இறுதியாட்ட வாய்ப்பு உறுதியாகிவிடும். இல்லாவிடின் பாகிஸ்தான் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டியின் முடிவுக்குக் காத்திருக்க வேண்டியிருக்கும்.

## ஓவல் டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்ததாக அறிவிப்பு

கராச்சி, ஜூலை 4

2006ஆம் ஆண்டு ஓவல் மைதானத்தில் இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நடந்த சர்ச்சைக்குரிய டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிந்ததாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டத்தின் போது நேற்றுமுன்தினம் புதன் கிழமை இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

முன்னதாக மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி இப்போட்டியில் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியின்நான்காம்நாள் ஆட்டத்தின்போது பந்தை சேதப்படுத்தியதாக பாகிஸ்தான் அணி மீது நடுவர் டேரல் புகார் கூறினார். இதையடுத்து பவிலியின் திரும்பிய பாகிஸ்தான் வீரர்கள் வெகு நேரமாகியும் மைதானத்துக்கு திரும்பாதமையால், இங்கிலாந்து வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கிரிக்கெட் வரலாற்றில் இது போன்ற முடிவு அறிவிக்கப்பட்டது அதுவே முதன்முறை ஆகும். இருப்பினும் கடந்த இரு ஆண்டுகளாக இப்போட்டி குறித்து சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் தொடர்ந்து புகார் கூறி வந்தது.

இந்நிலையில் கோரிக்கையை ஏற்று சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒப்புதலுடன் இப்போட்டி வெற்றிதோல்வியின்றி முடிந்ததாக அறிவிக்கப்பட்டது.

## திபெத் நிலைவரம் படுமோசம்; தலாய்லாமா விளக்க அறிக்கை

பீஜிங் ஜூலை 04

''சீனர்களின் ஆக்கிரமிப்பில் சிக்கியுள்ள திபேத்தில் சமூக, அரசியல் நிலைவரங்கள் மோசமடைந்துள்ளன. இயல்பு நிலை சீர் கேடடைந்து வருகிறது. சீனாவின் குரூர அடக்குமுறை மீண்டும் உலகின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும்'' என ஆன்மிகத் தலைவர் தலாய் லாமா, அறிக்கை யொன்றின் வாயிலாகத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை அவர், ஜப்பானிய தலைநகரான டோக்கியோவில் நிகழும் மாநாடொன்றின் பார்வைக்கு அனுப்பி வைத்துள்ளார். அவ்வறிக்கையில் அவர் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

''திபெத்தியர்களின் ஆன்மிகத் தன்மை, கலாசார நெறிமுறைகள், விழுமியங்கள் ஆகியவற்றை சீன கம்யூனிஸ்ட் அரசு திட்டமிட்டு பாழ்படுத்தி வருகிறது. திபேத்தியரின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன. சீனத்துக்கு அடங்கி, ஒடுங்கி நடக்குமாறு மக்கள் அச்சுறுத்தப் படுகிறார்கள்.

''திபெத் சீனாவுக்கோ, சீன மக்களுக்கோ எதிரான தல்ல. இது சீன மக்களை சகோதரர்களாகவே கருதுகிறது; மதிக்கிறது. எனினும் சீனத்தை ஆளும் கம்யூனிஸ்ட் அரசுதான், திபெத்தை காலனியாக்கும் பகீரத முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

# கொலம்பிய இராணுவம் அதிரடி நடவடிக்கை; 6 வருடப் பிடியிலிருந்து 15 கைதிகள் மீட்பு





பொகொட்டா, ஜூலை 04

கொலம்பிய பார்க் தீவிரவாத அமைப்பினால் கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் - கொலம்பிய அரசியல்வாதி இங்ரீட் பெட்டன் கோர்ட்டும், மற்றும் 14 பணயக் கைதிகளும் மீட்கப்பட்டு விட்டார்கள் என கொலம்பிய அமைச்சு தெரிவித்தது.

பெட்டன் கோர்ட் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரையும் இதர 14 கைதிகளையும் கொலம்பிய இராணுவம் அதிரடி வேட்டையை மேற்கொண்டு மிகச் சாதுரியமாக மீட்டுள்ளது என்றும் மேற்படி அமைச்சு குறிப்பிட்டது.

பாதுகாப்பாகவும், வெற்றிகரகமாகவும் இவர்களை மீட்டெடுத்தமைக்காக, ஜனாதிபதி அல்வாரோ உரிபி இராணுவத்துக்குப் பாராட்டுதல் தெரிவித்துள்ளார். அத்துடன் எஞ்சிய கைதிகளையும் விடுதலை செய்யுமாறும், சமாதான வழியை நாடுமாறும் அவர் பார்க் தீவிரவாத அமைப்பை வலியுறுத்தியுள்ளார்.

பெட்டன்கோர்ட் இராணுவ சீருடை தரித்திருந்தார். அவர் முகம் வெளிறிப் போயிருந்தது. புன்முறுவலுடன் விமானத்திலிருந்து சக கைதிகளுடன் இறங்கினார். விமான நிலையத்தில் ஊடக வியலாளர்களுக்கு அவர் தாம் அளித்தப் பேட்டியில், ''கடவுளே.... இது ஓர் அற்புத மீட்சிதான் '' என்றார்.

இச்செய்தி அறிந்த பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கலஸ் சர்கோஷி, எலிஸி மாளிகையில் பெட்டன் கோர்ட்டின் குடும்பத்தினரைச் சந்தித்தார். அது தருணம் அவர், ''கடந்த ஆறு வருடகாலமாக நீடித்து வந்த பயங்கரதிகில் கனவு கலைந்து விட்டது'' எனத் தெரிவித்துக் கொண்டார்.

பெட்டன் கோட்டின் புதல்வர் லோரன்ஸோ டிலோயி பெட்டன் கோர்ட், பாரிஸில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் இது குறித்து பிரஸ்தாபிக்கையில், '' எனது வாழ்க்கையில் இது ஓர் உன்னத தருணம்'' என மகிழ்ச்சியும் ஆறுதலும் தெரிவித்தார். இவரது சகோதரி மெலானி, ''தீய கனவிலிருந்து வெளியேறுகிறோம்'' என்றார்.

கொலம்பியாவின் தென்மாகாணமான கவியாரி என்னுமிடத்தில், புதன் கிழமை, இராணுவம் இந்த அதிரடி வேட்டையை மேற்கொண்டது. மீட்கப்பட்ட மொத்தம் 15 பேரும் ஆரோக்கியமான நிலையில் உள்ளனர் என, கொலம்பிய பாதுகாப்பு அமைச்சர் சுவான் மனுவல் சன்டோஸ் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தெரிவித்தார்.

''புதன் கிழமை மீட்கப்பட்டவர்களில் 11பேர் கொலம்பிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களாவர். தீவிரவாதிகளுடனான பல்வேறு தாக்குதல்களின் போது, இவர்கள் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்களாவர்'' என்றும் பாதுகாப்பு அமைச்சர் விளக்கினார்.

''மீட்கப்பட்டவர்களில் மூன்று அமெரிக்கர்களும் அடங்குவர். இவர்கள் பாதுகாப்புத் திணைக்கள ஒப்பந்த ஊழியர்கள். இவர்கள் பயணித்த சிறிய விமானம் 2003 ஆம்ஆண்டு, கொலம்பிய காட்டுக்குள் மோதி விபத்துக் குள்ளானது. அச்சமயம் இவர்கள் பார்க் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு விட்டார்கள்'' என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இங்ரிட் பெட்டன் கோர்ட் 2002 ஆம் வருட பெப்ரவரியில், பார்க் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து கடத்தப்படலானார்.

# புலிகளின் பகுதியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஒரு லட்சத்து 70 ஆயிரம் மக்கள் போதிய உதவிகளற்ற நிலையில் உள்ளனர் என அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தப்பிச் செல்பவர்களை கடந்த மார்ச் மாதம் முதல் கள்ளிமோட்டை நலன்புரி முகாமில் அரசு தடுத்துவைத்துள்ளது.

### அகதி முகாமில் தடுத்து வைப்பு

அவர்களின் நடமாடுவதற்கான சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் பல கடுமையான விதிமுறைகளையும் இலங்கை இராணுவம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பிட்ட முகாமிலிருந்து நாளொன்றிற்கு 30 பேர் மாத்திரமே வெளியில் செல்வதற்கு அனுமதிக்கும் விதத்தில் நாளாந்த அனுமதிப் பத்திர முறையை அது நடைமுறைப்படுத்துகின்றது.

மேலும் இவ்வாறு முகாமிலிருந்து வெளியே செல்பவர்கள் அன்று மாலையே முகாம் திரும்புவதை உறுதிசெய்வதற்காக குறிப்பிட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் குறைந்தது ஒருவர் முகாமிலிருந்து வெளியே செல்ல அனுமதிக்கப்படாமல் தங்கியிருக்க வேண்டும் எனப் பணிக்கப்படுகின்றனர்.

இலங்கையின் எந்த நீதிமன்றமும் இவ்வாறு பொதுமக்களைத் அகதி முகாமில் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங்கியிருக்கவில்லை. முகாமில் இருப்பவர்களுக்கு எதிராக எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவுமில்லை. எனவே இப்படிக் கட்டுப்பாடுகளை விதித்து தடைபோடுவது சர்வதேச மனித உரிமைச் சட்டத்திற்கு முரணானதாகும்.

மோதல் இடம்பெறும் பகுதிகளிலிருந்து பொதுமக்கள் தப்பியோடுகின்றனர் என்ற காரணத்திற்காக அரசு அவர்களை குற்றவாளிகள் போன்று நடத்தக் கூடாது என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான இயக்குநர் பிரட் அடம்ஸ் குறிப்பிடுகின்றார். உரிய பாதுகாப்பு கரிசனைகள் ஒவ்வொன்றாக ஆராயப்பட வேண்டும். நடமாட்ட சுதந்திரத்திற்கு வெளிப்படையாகத் தடைகளை விதிப்பதன் மூலம் பாதுகாப்பை ஏற்படுத்திவிடமுடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்தியாவிலிருந்து திரும்பிய பத்துக்கும் மேற்பட்ட அகதிகளையும் கள்ளிமோட்டை முகாமில் தடுத்து வைத்துள்ளதால் அவர்களின் பாதுகாப்பிற்காகவே இதனை செய்வதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்படுவது அர்த்தமற்றதாகின்றது.

விடுதலைப் புலிகளின் பகுதிகளிலிருந்து தப்பியோடும் மக்களை தடுத்து வைப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள முகாம்களில் ஒன்றே இது எனவும், இவ்வாறான பல முகாம்கள் வவுனியாவில் ஏற்படுத்தப்படப் போகின்றன எனவும்இராணுவம்தெரிவித்துள்ளது.

மேற்படி முகாமில் உள்ளவர்கள் எங்கு தங்க விரும்புகின்றனர் என்பது குறித்து அதிகாரிகள் மே 10ஆம், 11ஆம் திகதியில் ஆய்வொன்றை மேற்கொண்டனர். கள்ளிமோட்டை முகாமிலிருந்த 257 பேரில் ஐந்து குடும்பங்கள் மாத்திரமே அங்குதங்கியிருக்கவிரும்பம்வெளியிட்டன.

பெரும்பாலானவர்களை தாங்கள் அங்கிருந்து வெளியேறி பிற பகுதிகளில் தங்களை உபசரிக்க ஆட்கள் உள்ள இடங்களில் - தங்குவதற்கு விரும்பம் தெரிவித்தனர். இதுவரை ஆக 28 பேர் மட்டுமே வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கான ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி வோல்டெர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழ்பவர்களுக்கு சர்வதேச மனித உரிமை, மனிதாபிமான சட்டத்தின் கீழ் வரும் அனைத்து உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர்களின் பாதுகாப்பிற்கான செயற்பாடுகள் மனிதாபிமான அடிப்படையிலானதாக [illegible] நடமாட்ட சுதந்திரம் பாதிக்கப் பட்டு முகாம்களுக்குள் அவர்கள் முடக்கப் படக்கூடாது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சாட் மோதலில் 60 தீவிரவாதிகள் பலி

என்ஜமினா, ஜூலை 04

சாட்டில் முஸ்லிம் போதகர் ஒருவரைப் பின்பற்றும் தீவிரவாதிகளுக்கும் அரச துருப்புகளுக்கு மிடையே மூண்ட மூர்க்கமான மோதலில் 60 தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என, அந் நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

குணோ என்னுமிடத்தில் மதப் போதகரின் வன்முறையைத் தூண்டும் போதனைக்கு உடனடியாக தடைவிதிக்கப்பட்டது. இதையடுத்து தீவிரவாதப் போராளிகள் வன்முறைகளில் ஈடுபட முனைந்தார்கள். நிலைமையைக் கட்டுபடுத்த இராணுவம் வரவழைக்கப்பட்டது என்றும் அது விவரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை[illegible]மின் அஞ்சல்களால் [illegible]அதிகாரிகள் அதிர்ச்சி!

ஜி.எஸ்.பி. [illegible] இலங் கைக்கு வழங்க[illegible] என்று [illegible] பிரஸல்ஸ் நகருக்[illegible] வந்த யும் மின் அஞ்சல்[illegible] நாட்டு அதிகாரிகளை [illegible]

இவ்வாறு [illegible] பிலிருத்த் [illegible] சர்வதேச [illegible] அமைச்சர் [illegible]

அமைச்சரவை [illegible] அறிவிக் கும் வாராந்த [illegible] சந்திப்பு நேற்றுக் காலை [illegible] நாடாளுமன்றத்தின் முத லாம் குழு அறை[illegible] பெற்றபோது அதில் கலந்து[illegible] உரையாற்றுகை யிலே[illegible] கூறினார்.

[illegible] அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

பொய்யா[illegible] குற்றச்[illegible] ஆதா ரமாக வை[illegible] இந்த மின் அஞ்சல்கள் அனுப்ப[illegible] இந்த [illegible] ஜலுகை யைப் [illegible] வதற்கான உரிய [illegible] இல்லை என[illegible]

இ[illegible] பகுதியில் [illegible] யாற்[illegible] சார்பற்ற நிறுவனமொன்றின் தொ[illegible] 17 பேர் படுகொலை செய் [illegible] தொடர்பாக சர்வதேச நீதிமன் [illegible] இலங்கை விசாரிக்கப்படவுள்ளது [illegible] கூறப்படுவது இரண்டாவது குற்றச் சாட்டாகும்.

இந்த இரண்டு குற்றச்சாட்டுக்களும் எதுவித ஆதாரங்களும் அற்றவையாகும். பொறுப்பற்றவகையில் இவ்வாறான செய்தி கள் காரணமாக பாதிக்கப்படுவது கிராமங் களில் வாழும் அப்பாவி ஏழைத் தொழிலா [illegible]

[illegible] வெளிநாட்டுக் கொள்கை ஏற் [illegible] இல்லை என்றும் சிலர் குற்றம் சுமத்துகின்றனர். இதுவும் ஆதாரம் அற்ற குற்றச்சாட்டே.

[illegible] எமது நாட்டின் சிறந்த வெளி நாட்டுக் கொள்கைக்கு மதிப்பளித்தே உலக நாடுகள் இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்குகின்றன. நுரைச்சோலை, அம்பாந் தோட்டை மற்றும் சபுகஸ்கந்தை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படும் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உலக நாடுகள் தாராள உதவி வழங்குகின்றன.

கிழக்கில் அறுகம்குடாவில் அண்மை யில் திறந்து வைக்கப்பட்ட பாரிய பாலத் துக்கு அமெரிக்கா உதவி அளித்தோடு குறுகிய கால அழைப்பை ஏற்றுக்கொண்டு அமெரிக்க அரச உயர்மட்ட அதிகாரிகள் இலங்கை வந்து இது தொடர்பான விழா விலும் பங்கு கொண்டனர். இது உலக நாடுகள் எமதுவெளிநாட்டுக் கொள்கைக் குத் தரும் மதிப்பாகும். பழைய வெளி உறவுகளைப் புதுப்பித்துக்கொள்வதோடு புதிய நாடுகளின் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் எமது வெளிநாட்டுக்கொள்கை சிறப்பானதே எனவும் அமைச்சர் கூறினார்.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரும் வடமாகாண செயலணிக் குழுவின் தலை வருமான டக்ளஸ் தேவானந்தா, மேல் மாகாணசபை ஆளுநர் அலவி மௌலானா ஆகியோர் கலந்து கொண்டனர். (சி)

## கருணா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் டொமினிக் வில்சன் உறுதி செய்துள்ளார். கருணா இலங்கை திரும்பி யுள்ளமையை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் அமைப்பின் பேச்சாளர் அஸாத் மௌலானாவும் உறுதி செய்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ விடு தலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் எனும் அமைப்புத் தொடங்கிய கருணா, போலியான கடவுச்சீட்டுடன் பிரித்தானியாவுக்குள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் அந் நாட்டு அதிகாரிகளால் கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்தார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டமையைத் தொடர்ந்து கருணாவுக்கு ஒன்பது மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிறைத் தண்டனை முடிவடைந்த பின்னர் அவர் குடிவரவுத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் பிரிட் டன் அதிகாரிகளின் பாதுகாப்புடன் அவர் விமானம் மூலம் இலங்கைக்கு நாடுகடத் தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

## துணுக்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"சுமார் 5ஆயிரம் குடும்பங்கள் வரை யில் உடனடியாக அந்த பிரிவுகளில் இருந்து இடம்பெயரக் கூடிய சூழ்நிலை உள்ளது. எவ்வளவு பேர் தற்போது இடம் பெயர்ந்தி ருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு இன் னும் கிடைக்கவில்லை" என்றும் திருமதி சுகுமார் மேலும் கூறினார்.

இம்மக்கள் பாதுகாப்புக் கருதி கிளி நொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக் கும் சென்றுள்ளார்கள், செல்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து செல்லும் மக்களின் தேவைகளை கவனிக்கும் பொருட்டு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபரை அப்பிரதேசத்துடன் சேர்த்து துணுக்காய் பிரதேசத் தையும் கவனிக்குமாறு அரச அதிபரினால் வேண்டு கோள் விடப்பட்டிருந்தது.

எனினும் 'கிளைமோர்' கண்ணிவெடி ஆபத்து காரணமாக தன்னால் தமது பிரதே சத்திலேயே பணியாற்ற முடியாது இருப் பதினால் தன்னை முல்லைத்தீவு பிரதேசத் துக்கு இடமாற்றம் செய்து தருமாறு மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்று ஒரு தகவல் தெரி வித்தது.

இந் நிலையில் இடம்பெயர்ந்துள்ள மக்க ளுக்குரிய அவசர தேவைகளை நிறை வேற்றுவது கடினமான பணியாகி உள்ள தாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-02)

# [illegible]யில் கிளைமோருக்கு [illegible]ஒருவர் பலி

வவுனியா, ஜூலை 4

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட் டில் உள்ள முல்லைதீவு, துணுக்காய, ஐயன்குளப் பகுதியில் நேற்று இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் வேட் டைக்குச் சென்றவர் ஒருவர் உயிரி ழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அந்த இடத்தைச் சேர்ந்த இராஜ கோபால் ஜீவிதன் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார். படையினரின் ஆழஊடுருவும் அணியினரே இத் தாக்கு தலை நடத்தினர் என்று விடுதலைப் புலி கள் குற்றம் சாட்டியுள்ளனர். (சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மின்சாரசபை அறிவித்துள்ளது.

நாளை காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மின் விநியோகம் தடைப்பட் டிருக்கும் என்றும் பிரதேச மின்பொறியிய லாளர் தெரிவித்துள்ளார். (அ-1)

## யுத்த வெற்றியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியவை வருமாறு:-

அரசு கடந்த மூன்று வருடங்களாக அரச ஊழியர்களின் சம்பளத்தைப் பல தடவை களில் உயர்த்தியுள்ளது. தனியார் துறையி னரின் சம்பளத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது அரச ஊழியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 11ஆயிரம் ரூபாவாக வுள்ளது. ஜூலை மாதத்திலிருந்து ஆயிரம் ரூபாசம்பள அதிகரிப்பை மேற்கொள்ளவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற் கொள்ள அரசு முயற்சி செய்துவரும் நிலை யில், அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் ஜே.வி.பி.சார்பு தொழிற்சங்கங் கள் இம்மாதம் 10ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மா னித்துள்ளன.

### அரசியல் நோக்கம் கொண்டது

உண்மையில் இந்தப் போராட்டம் அர சியல் நோக்கத்துடனேயே மேற்கொள்ளப் படுகின்றது.

இவ்வாறான செயற்பாடு படையினர் மேற்கொண்டுவரும் யுத்தத்திற்குத்தடையை ஏற்படுத்தி அவர்கள் பெறவிருக்கும் யுத்த வெற்றியை இல்லாமல் செய்துவிடும்.

அதேவேளை, நாட்டில் ஸ்திரமற்ற தன் மையையும் இது ஏற்படுத்திவிடும். இந்த வேலைநிறுத்தம் உண்மையில் தேவை யற்ற ஒன்று. இது அநீதியானது.

அரசியல்நோக்கம் கொண்ட - தமது கட்சி களுக்கிடையே உள்ள உள்வீட்டுப் பிரச்சி னையை மூடி மறைக்கும் நோக்கம் கொண்ட - இவ்வாறான வேலைநிறுத்தப் போராட் டச் சதியில் சிக்கவேண்டாம் என்றும் நாம் தொழிலாளர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபடாது அன்றைய தினம் வேலைக்குச் செல் லும் தொழிலாளர் களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படா தவாறு அவர்க ளைப் பாதுகாப் பதற்கும் அரசு நட வடிக்கை எடுத் துள்ளது - என் றார் அவர். (அ-உ)

## [illegible] மேலும்...

([illegible] பக்கத் தொடர்ச்சி)

[illegible] ஆர். எம்.70, பல்குழல் பீரங் கிகளுக்கான 122 மில்லி மீற்றர் ஏவுகணை [illegible] எம்.பி. - 3 தொடர் இலக்க துருப் புக் காவிகளுக்கான உதிரிப்பாகங்கள் உட்பட பெருந்தொகையான ஆயுத தளபா டங்கள் கடந்த சனிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்திருப்பதாக மேற்படி தகவல் மேலும் தெரிவித்தது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் செக் நாட் டுக்குச் சென்ற இலங்கை இராணுவ உயரதி காரிகள் அடங்கிய குழு, இந்த ஆயுத தள பாடக் கொள்வனவை இறுதி செய்து விட்டு வந்தமை தெரிந்ததே.

இதேவேளை, ஸ்லோவோக்கியா நாட்டி டமிருந்து ஆர்.எம். 70 பல்குழல் பீரங்கிகளுக் கான ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட் டிருந்த இலங்கை இராணுவம் கடந்த மாதம் அவற்றைப் பெற்றுக்கொண்டதாகக் தெரியவருகின்றது. (உ)

## ஏறாவூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற ஜீப் மீதே இத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இடத்தைச்சேர்ந்த யோகேஸ்வ ரன் என்பவரே இவ்வாறு சுட்டுக்கொலை செய்யப்பட்டவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் வவுனியா வைத் தியசாலையில் பிரேத அறையில் வைக்கப் பட்டிருந்தது. (உ.)

## பத்திரிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து ஜனாதிபதிக்கு இலங்கைப் பத் திரிகை வெளியீட்டாளர் சங்கம் எழுதி யுள்ள கடிதத்திலேயே இது குறித்துத் தெரி விக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர்களைத் தாக்குவதன் மூலம் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்து வதற்கான முயற்சி இடம்பெறுவதாக ஜனா திபதி தெரிவித்த கருத்தைத் தமது கவனத் தில் எடுத்துள்ள பத்திரிகை வெளியீட்டா ளர்கள் இது குறித்த விசாரணைகள் வேக மாக இடம்பெற்று, தாக்குதல் மேற்கொண் டவர்கள் இனம் காணப்படுவதற்கான சூழல் உள்ளமையை இக்கருத்துக் காட்டு கிறது, அத்துடன் இந்நிலைப்பாடு கருத் துச் சுதந்திரத்திற்கும், நல்லாட்சிக்கும் நன் மையளிப்பதாக அமையும் என்றும் குறிப் பிட்டுள்ளனர்.

பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்களின் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்ப டுத்தும் இவ்வாறான தாக்குதல்கள் மேலும் இடம்பெறுவதைத் தடுக்குமாறும் ஜனாதி பதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட் டுள்ளதுடன், இவ்விடயத்தில் ஜனாதிபதி தலையிடுகின்றமை இந்தத் தாக்குத லுக்கும், இதுபோன்ற கடந்த காலச் சம்ப வங்களுக்கும் காரணமானவர்கள் கைது செய்யப்படுவதற்கு வழிவகுக்கும் என் றும் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, ஊடகவியலாளர் கள் நாமல் பெரேரா தாக்கப்பட்டமை தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு புதிய பொலிஸ் மா அதிப ரைக் கோரும் கடிதமொன்றை இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் எழுதியுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங் கள் இடம்பெறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கை களையும் தாம் எடுப்பார் எனப் பொலிஸ்மா அதிபர் உறுதியளிக்க வேண்டுமென அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (உ)


THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
BIOLOGY- 2009
PAPER CLASS
ஆரம்பம்: 05.07.2008
SAT, SUN 8.00-9.30 A.M
S.PONTHIVAKARAN

அனைத்து தரப்பினருக்கான
ONLINE CLASSES
காலை, மாலை வேளைகளில் ஆரம்பம்
Dip. In Visual Basic
Dip. In Internet e-mail
Dip. In Microsoft Office
Dip. In Desktop Publishing
Dip. In Hardware Engineering
Dip. In Computerized Accounting
Start on: 04.05.07.2008
Softview Computer College
58, Arasady Rd, Jaffna. T.P. 021 2225170

விற்பனையில்
DAIDO 49CC

★ SELF START மற்றும் RR மோட் டார் சைக்கிள் பற்றி நிகள்
★ CALTEX OIL வகைகள்
★ மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்கள் [illegible] யாகவும் பெற்றுக்
பரமேசு மோட்டார்ஸ்
165, ஸ்ரான்லி வீதி,

பெண்களுக்கான யோகாசனப் பயிற்சி வகுப்ப ஆரம்பம் இன்று (04.7.2008)
தொடர்பு:-
86, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
[சனி/ஞாயிறு மட்டுமே]

புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
(Jaffna University)
• 1st in com
• Bcom (part I)
• B com (part II)
• B com (final)
• GAQ, BA I, BA (final) ஆகிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம் :- 05-07-2008, (7am)
aat (SriLanka)
Intermediate level & Final
Medium – Tamil & English Exam :- Dec 2008
புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன
Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road, (Near Commercial Bank) Jaffna.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org